கம்யூனிசம் தோற்றதாம்! முதலாளித்துவம் வென்றதா?

www.padippakam.com

15 அக்டோபர் '95 □ ரு 3.50

# புதிய ஜனநாயகம்



ரஜினி ஒரு
ஆம்பிளை
ஜெயாதான்

படிப்பகம்

www.padippakam.com

# தாபர் - டியுபாண்ட்: மோசடியிலும் முன்னணி

கோவாவைச் சேர்ந்த கிளாடி ஆல்வார் சமூகவியலாளரும் பத்திரிகையாளரும் ஆவார்; கோவாவில் நடைபெற்ற நைலான் 6,6 ஆலை எதிர்ப்புப் போராட்டத்தில் முன்னணியாக இருந்து செயலாற்றியவர். 13.09.95 அன்று அவர் சென்னையில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த பொழுது, "தாபர் - டியுபாண்ட் நிறுவனம் சுற்றுப்புறச் சூழலுக்கு எதிரானது மட்டுமல்ல; அயோக்கியத்தனமான வழிமுறைகளில் உண்மைகளைத் திரித்துப் புரட்டி வெளியிட்டு, தன்னை யோக்கிய சிகாமணியாகக் காட்டிக் கொள்ளும் கபடம் நிறைந்ததுமாகும்" என்பதற்குத் தங்களது போராட்ட அனுபவத்தில் இருந்து பல சான்றுகளை எடுத்து வைத்து உரையாற்றினார்; தாபர்-டியுபாண்டின் இம்மோசடிகளை அறிந்து கொள்வது அதனை எதிர்த்த போராட்டத்தில் தமிழக மக்களுக்குப் பேருதவியாக அமையும்.

● கோவாவில் தாபர் - டியுபாண்ட் நிறுவனம் தனது தொழிற்சாலையினை அமைத்துக் கொள்ள அம்மாநில மாசு கட்டுப்பாடு வாரியம் தனக்கு ஒப்புதல் (Approval) வழங்கி விட்டதாக அறிவித்திருக்கிறது. ஆனால் மாசு கட்டுப்பாடு வாரியம் இந்நிறுவனத்திற்கு "என்.ஓ.சி." எனப்படும் ஆட்சேபனையின்மைச் சான்றிதழ் மட்டும்தான் வழங்கியுள்ளது. ஒப்புதல் தொழிற்சாலை நிறுவிய பின் ஆய்வு செய்யப்பட்டு வழங்கப்படக் கூடிய ஒன்றாகும். ஆனால் தாபர் - டியுபாண்ட் இவ்விதிமுறையையே திரித்துப் புரட்டி பிரச்சாரம் செய்து வந்தது.

● கோவாவில் நைலான் 6,6 ஆலை எதிர்ப்பாளர்கள் இவ்வாலை அமைவதை எதிர்த்து கோவா உயர்நீதிமன்றத்தில் வழக்கொன்றை தொடுத்திருந்தனர்; பின்னர் இவ்வாண்டின் தொடக்கத்தில் அவ்வாலை அமையவிருந்த கேரிம் பகுதியில் மக்களின் போராட்டம் தீவிரமடைந்து, போலீசு நடத்திய துப்பாக்கி சூட்டில் நிலேஷ் நாயக் என்ற இளைஞர் இறந்துவிடவே, ஆலையை நிர்மாணிக்க இயலாத சூழல் ஏற்பட்டது; இதனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவைப் போராட்ட அமைப்புகள் தாங்களே திரும்பப் பெற்றுக் கொண்டன. ஆனால் இவ்வுண்மையைத் திரித்துப் புரட்டி நீதிமன்றம் தனக்கு எதிரான மனுவைத் தள்ளுபடி செய்து விட்டதாக பத்திரிகைகளுக்கு செய்தி கொடுத்தது, தாபர் - டியுபாண்ட்.

● மைய விஞ்ஞான - தொழில் ஆய்வு மையத்தைச் சேர்ந்த மாஷங்கர் எனும் விஞ்ஞானி "தனது நைலான் 6, 6 தொழில் நுட்பம் சுற்றுச் சூழலுக்குக் கேடு விளைவிக்கக் கூடியதல்ல" என அறிக்கை தயாரித்து வெளியிட்டுள்ளதாகக் கூறி வருகிறது தாபர் - டியுபாண்ட். ஆனால் உண்மையிலேயே இவ்விஞ்ஞானி அறிக்கை தயாரித்த பொழுது தேசிய இரசாயன ஆய்வகத்தில்தான் வேலை பார்த்து வந்தார். மேலும் இவர் டியுபாண்ட் அமெரிக்காவில் நடத்தி வரும் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக வேலை பார்த்தவர். இவர் தயாரித்த அறிக்கையும் மூன்று பக்கங்கள் மட்டுமே கொண்டதாகும்.

இந்த அறிக்கையை அச்சடித்து இலவசமாக விநியோகித்து வரும் தாபர் - டியுபாண்ட், இதே அறிக்கையின் நகல் தனக்கு அளிக்கப்பட வேண்டுமென கோவா உயர்நீதிமன்றத்தில் மனுச் செய்துள்ளது.

● கேரிம் பகுதியில் இவ்வாலையின் அலுவலகத்தை கோவா மக்கள் முற்றுகையிட்ட பொழுது, அங்கிருந்த ஐநூறு ரூபாய் கட்டுக்கள் நிறைந்த இரண்டு பெட்டிகளைக் கண்டெடுத்து தீயிட்டனர்; அந்த சமயத்தில் கோவா சட்டமன்றத் தேர்தல் நடைபெற்று வந்தது குறிப்பிடத்தக்கது. மேலும் ஏ.கே. 47 இரக துப்பாக்கியொன்றையும் அம்மக்கள் அவ்விடத்தில் கைப்பற்றினர்.

● கோவாவில் ஆலை அமையவிருந்த இடத்தில் 3 லட்சம் சதுர அடிக்கு சுற்றுச் சுவர் கட்டிக் கொள்ளலாம் என்ற நீதிமன்ற உத்தரவை, 12 லட்சம் சதுர அடி என மாற்றி பிரச்சாரம் செய்தது. பின் இந்த உத்தரவை நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது.

● கோவாவில் ஆலைக்கு அடிக்கல் நாட்ட ஹெலிகாப்டர் மூலம் இறங்க முயன்று தோற்று ஓடிப்போன தாபர்-டியுபாண்ட், தமிழகத்தின் கும்மிடிப்பூண்டியில் யாரும் அறியாவண்ணம் 28.08.95 அன்று அதிகாலை 4.30 மணிக்கு போலீசு படை சூழ அடிக்கல் நாட்டியுள்ளது. ஆனாலும் தன்னார்வக் குழு தலைமையிலான ஆலை எதிர்ப்பாளர்கள் கடந்த 20.09.95 அன்று கட்டிட வேலையைத் தடுத்து நிறுத்தியதோடு, அந்நிறுவனத்துக்குச் சொந்தமான சில மோட்டார் வண்டிகளுக்கும் கட்டிடத் தளவாடங்களுக்கும் தீ வைத்தனர். இதனை "கட்டிட ஒப்பந்தக்காரர்களிடையே ஏற்பட்ட மோதல்" என உண்மைக்குப் புறம்பாக செய்தி கொடுத்துள்ள தாபர் - டியுபாண்ட், "கோவாவில் இருந்து சில விஷமிகள் கும்மிடிபூண்டியில் நுழைந்துள்ளனர்" என இழிந்த அவதூறையும் பரப்பத் தொடங்கியுள்ளது.

# ஆயுதக் கடத்தலில் இந்து முன்னணிக் கும்பல்

இலங்கையில் போராடிவரும் சில தமிழினக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைப் பெற்று, அவற்றை உள்நாட்டில் இரகசியமாக விற்பதில் இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த சமூக விரோதிகள் சிலர் ஈடுபட்டு வருகின்றனர். இந்த ஆயுதக் கடத்தல் கும்பலில் மோகன், மினி பாஸ்கர் என்ற இருவரும் முக்கிய புள்ளிகள். இதோடு இவ்விருவரும் இராமேஸ்வரம் பகுதி இந்து முன்னணியின் செயல் வீரர்களும் கூட. போலீசாரின் தேடுதல் வேட்டையைத் தொடர்ந்து இருபது நாட்களுக்கு முன்பு இராமநாதபுரம் நீதிமன்றத்தில் சரணடைந்த இவர்கள் மீது ஆயுதக் கடத்தலின் கீழ் வழக்குத் தொடரப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு உள்ளனர்.

தன்னை அரசியல் ரீதியாக அம்பலப்படுத்தும் புரட்சிகர - ஜனநாயக சக்திகளை "ஆயுதக் கலாச்சாரத்தைப் பரப்புவோர்" என அவதூறு செய்யும் இந்து முன்னணிக் கும்பலின் உண்மை முகமே இதுதான். மதக் கலவரங்களின் பொழுது இந்துவெறிக் கும்பலுக்குக் கிடைக்கும் ஆயுதங்களுக்கு ஊற்றுமூலமும் இதுதான். மேலும், அமைதி விரும்பிகளாகத் தங்களைக் காட்டிக் கொள்ளும் எந்தவொரு பார்ப்பன பத்திரிகையும் இதனை அம்பலப்படுத்தி செய்தி வெளியிடவில்லை. புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியினர் மட்டும்தான் சிலைமான், திருப்புவனம், மதுரை, முதுகுளத்தூர், இராமநாதபுரம், இராமேஸ்வரம் பகுதிகளில் சுவரொட்டிகளின் வாயிலாக மக்கள் மத்தியில் இந்து முன்னணியின் இக்கோர முகத்தை அம்பலப்படுத்தினர்.

புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி,
மதுரை - இராமநாதபுரம்.


படிப்பகம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு

தொகுதி: 10

இதழ்: 21

16 செப். - 15 அக். '95

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.50
ஆண்டு சந்தா: ரூ. 84.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

இரா. சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
25, அருணாசலம் தெரு,
ஜோதிராமலிங்க நகர்,
ஜாபர்கான் பேட்டை,
சென்னை - 600 083.

# கயவர்கள் கையில் நாடும் அதிகாரமும்

''ஹவாலா'' எனப்படும் சர்வதேச பணக் கடத்தல் தொழிலிலும் உள்நாட்டு வெளிநாட்டு இரகசிய உலக கிரிமினல் கும்பல்கள் - மாஃபியாக்களுடனும் நாட்டின் முக்கிய அரசியல் புள்ளிகள், உயர் அதிகாரிகள் அனைவரும் சம்பந்தப்பட்டு இருப்பதாக தற்போது வெளிவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. நாட்டின் ஒட்டுமொத்த அரசியல் அமைப்பே இலஞ்ச ஊழலில் புரையோடிப் புழுத்து நாறுவது மீண்டும் அம்பலமாகி வருகிறது. இவ்வாண்டின் தொடக்கத்தில் சர்வதேச பணக்கடத்தல் மன்னனும், பெருமுதலாளிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையிலான தரகனுமான சுரேந்திர ஜெயின், அந்நியச் செலாவணி மோசடி குற்றத்துக்காகக் கைது செய்யப்பட்ட போது 4500 கிலோ தங்கமும் அவனது நாட்குறிப்பேடும் (டைரி) சிக்கியது. அதிலே அரசாங்க பெரும் புள்ளிகள் - பிரதமர், மந்திரிகள், எம்.பி.க்கள், அத்வானி, ஆரிப் முகம்மதுகான், தேவிலால், சரத்யாதவ், அருண் நேரு உள்ளிட்டு சர்வகட்சிப் பெரும் புள்ளிகள் மற்றும் அரசு உயர் அதிகாரிகளுக்கு எப்போது, எவ்வளவு கோடி லஞ்சம் தரப்பட்டது என்ற விபரங்களும் சிக்கின. நாட்டின் மிகப் பெரிய பொருளாதாரக் குற்றமாகிய இந்த விவகாரத்தைப் பற்றி போலிக் கம்யூனிஸ்டுகள் உள்ளிட்டு எந்த ஓட்டுக்கட்சியும் நாடாளுமன்றத்தில் வாயே திறக்கவில்லை. ஏனெனில் எல்லா ஓட்டுக் கட்சிகளுமே ''ஹவாலா'' மன்னர்களின் சம்பளப் பட்டியலில் உள்ளன.

தமது அரசியல் ஆதாயத்துக்கும், எதிர்த்தரப்பினரை பழிவாங்கவும், மிரட்டிப் பணிய வைக்கவும் இதை ஒரு முக்கிய துருப்புச் சீட்டாக ஓட்டுப் பொறுக்கிகள் பயன்படுத்திக் கொள்கின்றனர். இதன் தொடர்ச்சியாகவே சந்திராசாமி மீது விசாரணையும் ஜெயா - சசிகலா கும்பல் மீதும், சோனியா ஆதரவு தொழிலதிபரான லலித் சூரி மீதும் புலனாய்வுத் துறையினர் சோதனை நடத்திச் சூடேற்றுகின்றனர். அதேபோல இரகசிய உலகக் கிரிமினல் மாஃபியாக் கும்பலுடன் சர்வகட்சித் தலைவர்களுக்கும் உள்ள உறவை அம்பலப்படுத்தி ஆதாயம் தேட முயற்சிக்கின்றனர். இதன் ஒரு பகுதியாகத்தான் ராவ் அரசின் ராஜகுரு சந்திராசாமிக்கும் பம்பாய் தாதா தாவூத் இம்ராகிம் கும்பலுக்கும் சர்வதேச கிரிமினல் பட்லு சீறிவத்சவா மூலமான தொடர்பை விசாரிக்கும்படி உத்தரவிட்டு உள்துறை இணைமந்திரி என்ற அதிகாரமிக்க தனது பதவியை காத்துக்கொள்ள ராஜேஷ் பைலட் முயன்றார். ராவ் அரசும் சந்திராசாமி மீது சி.பி.ஐ. நடவடிக்கை எடுப்பதாக சில கண்துடைப்பு வேலைகயளச் செய்கிறது.

ஜெயா - சசிகலா கும்பல் கடந்த நான்காண்டுகளாக கோடிகோடியாய் கொள்ளையடித்து வந்தபோதிலும் மேல்வாயையும் கீழ்வாயையும் மூடிக் கொண்டிருந்த ராவ் கும்பல், இப்போது தேர்தல் ஆதாயத்துக்காக ''ஹவாலா'' மோசடியை ஒரு ஆயுதமாகக் கொண்டு ஜெயா கும்பலை மிரட்டிப் பணிய வைக்க முயற்சிக்கிறது. ஏற்கனவே நிதித்துறை அமலாக்கப் பிரிவு அதிகாரிகள் இக்கும்பலுக்கு எதிராக சில 'நடவடிக்கைகள்' எடுத்த பிறகு இப்பேது ஜெ.ஜெ. டி.வி.யின் நிர்வாக இயக்குநரும், சசிகலாவின் அக்காள் மகனுமான பாஸ்கரனை அந்நியச் செலாவணி மோசடிக் குற்றங்களுக்காகக் கைது செய்துள்ளனர். தலைமறைவாகிவிட்ட அவரது சகோதரர் தினகரன் இப்போது அமலாக்கப் பிரிவு அதிகாரிகளின் விசாரணையில் இருப்பதாக செய்திகள் கசிந்துள்ளன. இதுதவிர, கோடிகோடியாய் வாரியிறைத்து வக்கிரமான முறையில் நடத்தப்பட்ட ஜெயா வளர்ப்பு மகன் திருமணச் செலவுகள் பற்றி வருமான வரித்துறை அமலாக்கப் பிரிவு அதிகாரிகள் விசாரணை நடத்துகின்றனர். ஆனால் பிரதமர் மகனும், அரசுத் தலைவரின் பேரனும் ஜெயா கும்பலுடன் கூடிக் குலாவுகின்றனர். அவர்களுக்கு விருந்தும் விபச்சாரமும் யாகங்களும் இரகசியமாக நடக்கின்றன. சசிகலா கும்பலைக் கழற்றிவிட்டு பரிசுத்த பார்ப்பன ஜெயா கும்பலுடன் தேர்தல் கூட்டு வைத்துக் கொள்ளும் நோக்கத்துடன்தான் ராவ் கும்பல் ''ஹவாலா'' விவகாரத்தை ஒரு ஆயுதமாக ஏவி வருகிறது.

இலஞ்ச ஊழல், கிரிமினல் குற்றங்களுக்காக ஜெயா கும்பலை எதிர்க்கும் ஜனதா தலைவரான சுப்பிரமணியசாமி, குமரி அனந்தன் போன்றவர்கள் இதே குற்றங்களைச் செய்துவரும் சந்திராசாமியை வெளிப்படையாகவே ஆதரித்து நிற்கிறார்கள். இத்தகைய சோதனை, விசாரணை, குற்றச்சாட்டுகளைக் கண்டு சசிகலா கும்பலோ, சந்திராசாமியோ அஞ்சி நடுங்கிவிடவுமில்லை. தன்னைக் கைது செய்யக் கூடாது என்று சாமியார்கள் - சாதுக்களைத் திரட்டி எதிர்ப்பு ஊர்வலம் நடத்தித் தனது அதிகார பலத்தைக் காட்டி சவால் விடுகிறார், சந்திராசாமி. அதே போல, ஜெ.ஜெ.டி..வி.யின் பாஸ்கரனைக் கைது செய்ததற்குக் கண்டனம் தெரிவித்து, கேபிள் டி.வி. ஆபரேட்டர்களை மிரட்டி, அனைத்துத் தனியார் டி.வி. ஒளிபரப்பை நிறுத்தச் செய்து கொக்கரிக்கிறது சசிகலா கும்பல். இப்படி மோசடி - கிரிமினல் - இரகசிய உலகப் பேர்வழிகள் பகிரங்கமாகச் சவால் விடுவது இந்திய வரலாற்றிலேயே இதுவே முதன்முறையாகும். எத்தகையதொரு மக்கள் விரோத சமூக விரோத கிரிமினல் கும்பலிடம் நாடு சிக்கியுள்ளது என்பதற்கு இதுவே சான்று கூறப் போதுமானது. இப்போது தேச விரோத சமூக விரோத நடவடிக்கைகள் திரைமறைவில் ரகசியமாக நடப்பது இல்லை. அவை பகிரங்கமாகவும் திரந்தரமாகவும் நிறுவனமயமாகி விட்டன. இன்றைய அரசியல் அமைப்பை தகர்த்து எறியாமல் அவற்றையும் அவற்றுக்கு அடிப்படையான காரணங்களையும் ஒழிக்க முடியாது.

படிப்பகம்

www.padippakam.com

# ரஜினி ஒரு ஆம்பளை ஜெயாவே

ரஜினிகாந்த் 27.9.95 அன்று வெளியிட்ட அறிக்கையில் தற்போது அரசியலில் ஈடுபடப்போவதில்லை என்று அறிவித்திருந்தாலும் ஜெயாவுக்கு எதிராகப் பேசிய சில அதிரடிப் பேச்சுக்கள் மூலம் தனது அரசியல் பிரவேசம் பற்றிய சர்ச்சையைத் தொடர்ந்து நீடிக்கவும் இடம் கொடுத்திருக்கிறார். ரஜினியின் அதிரடி பேச்சுகளைக் கண்டு ஆத்திரமுற்று பாசிச ஜெயாவும் சும்மா இருக்க மாட்டார்.

ரஜினி அரசியலுக்கு வந்து விடுவாரோ, வந்தால் எம்.ஜி.ஆர் போல் மக்களைக் கவர்ந்து அடுத்த முதல்வர் ஆகிவிடுவாரோ என்ற அச்சம் மற்றும் தமது கட்சிக்குள்ளும் ரஜினி ரசிகர்கள் இருப்பதன் காரணமாகவும் பல ஓட்டுக்கட்சிகள் ரஜினிக்கு எதிராக கருத்துக் கூற விரும்பவில்லை. தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க., போலி கம்யூனிஸ்டுகள் வரை 'ரஜினி அரசியல் பிரவேசம்' பற்றி தெளிவாக கருத்துக் கூறாததும் மௌனம் சாதிப்பதும் உள்ளது. ''பாட்ஷா'' படவிழாவில் பேசிய ரஜினிக்கு ஆதரவாக அறிக்கை விடாதவர்கள் இல்லை. இவர்கள் ஜெயாவுக்கு எதிராக ரஜினி முன்னிறுத்தப்படுவதை ஒருவகையில் ஏற்றுக்கொள்கிறார்கள்.

ஆனால் நாம் ரஜினி பற்றி உருவாக்கப்படும் மாயைகளை உடைக்க வேண்டியுள்ளது; சில உண்மைகளைச் சொல்ல வேண்டியுள்ளது. ''ரஜினி ஒரு ஆம்பள ஜெயாதான்'' என்பதையும் ரஜினியுடன் வீரப்பன், திருநாவுக்கரசு, காங்கிரசு போன்ற கழிசடைக் கும்பல்களைப் பற்றியும் அம்பலப்படுத்துவது தற்போது அவசியம்.

அரசியல், திரைப்படம், பத்திரிகை துறைகளில் உள்ள சில கும்பல்கள்தான் ஜெயா என்ற வில்லியை எதிர்க்கும் கதாநாயகனாக ரஜினியைச் சித்தரித்துக் கொண்டிருக்கின்றன. ரஜினியின் ஒவ்வொரு அசைவுகளையும் விடாது துரத்திப் படம் பிடித்து, பூதாகரப்படுத்தி கண், காது, மூக்கு வைத்து உருவம் கொடுத்து பரபரப்பாக்கிக் கொண்டிருக்கின்றன. மீனவ நண்பனாக, விவசாயியாக, கூலித் தொழிலாளியாக, நேர்மையுள்ள அதிகாரியாக எம்.ஜி.ஆர். நடித்ததைக் கொண்டு உருவாக்கப்பட்ட மாயத்தோற்றம் போல் ரஜினிக்கும் அவர் நடித்த ஒரு சில படங்களில் உள்ள குணச்சித்திர தன்மைகளைக் கொண்டு ஒரு போலியான தோற்றத்தை உருவாக்கி, எம்.ஜி.ஆரின் வாரிசாகச் சித்தரிக்கிறார்கள்.

ரஜினியைப் பற்றி திட்டமிட்டுப் பரப்பப்படும் மாயைகளில் மயங்கி ''தலைவா! ஒரு வார்த்தை சொல்; உனக்காக உயிர் கொடுக்கிறோம்'' என்று கூறி ரஜினி வீட்டு வாசல்முன் ரசிகர்கள் தவம் கிடக்கிறார்கள். வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள், பட்டதாரிகள் எல்லோரும் ரஜினி ரசிகர்கள் என்று பெருமையோடு சொல்லிக் கொள்கிறார்கள்.

ரஜினியைப் பற்றி யாராவது விமர்சனம் செய்தால் இவர்களுக்குக் கோபம் வருகிறது. ரஜினியை தாக்கி எழுதிய பத்திரிகையாளர்களை, கேலிச்சித்திரக் காரர்களை மிரட்டுகிறார்கள். ஜெயாவுக்கும் ரஜினிக்கும் பெரும் மோதல் நடப்பதாகவும் ரஜினி பாதிப்படையும் தியாகியாகவும் உருவாக்கப்படுகிற புரளிக்கு மயங்கி அ.தி.மு.க. கட்சியுடன் மோதுகிறார்கள். ஜெயாவின் போலீசு மற்றும் அ.தி.மு.க. ரவுடிகளுக்கும் ரஜினி ரசிகர்களுக்கும் இடையிலான பகை வெட்டுக் குத்து, மோதல் - இரத்தப்பழி வரை சென்றுள்ளது.

உண்மையில் ஜெயாவுக்கும் ரஜினிக்கும் இடையில் எந்தவொரு பெரிய முரண்பாடோ - மோதலோ இல்லை. தனிநபர் துதியால் இருவரிடமும் இருக்கும் செருக்கு, தன்னகங்காரம் போன்றவைகளால் விளைந்த தனிநபர் மோதல்தான் சிறிதே உள்ளது. இதுவும் கூட போயஸ் கார்டனில் ஜெயாவின் பாதுகாப்பிற்காக ரஜினியின் ''காரை'' சோதனையிட்டது, தடுத்துக் காக்க வைத்தது, ரசிகர்களைச் சந்திக்க விடாமல் கெடுபிடி செய்தது போன்ற சிறு பிரச்சினைகளிலிருந்து எழுந்த மனக்கசப்புதான் சிறுமோதலாக வடிவெடுத்துள்ளது.

''பாட்ஷா'' பட வெற்றி விழாவில் ஆர்.எம்.வீரப்பன் முன்னிலையில் தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு நிலைபற்றி கண்டித்தது, தனது துறையிலுள்ள சக கலைஞர் பாதித்த உந்துதலில்தான்; ஜெயா ஆட்சிக்கு எதிரான நோக்கில் அல்ல. மேலும் ரஜினியின் இந்தப் பேச்சு ஜெயாவுக்கும் அவரது போலீசு கும்பலுக்கும் உதவக்கூடியது என்பதுதான் உண்மை.

''பஞ்சாப் தீவிரவாதத்தின் கொட்டத்தை போலீசு அதிகாரி கில் அடக்கவில்லையா? அவரிடம் முழு அதிகாரமும் தரப்பட்டது. நம்ம போலீசு யாருக்கும் சும்மி அல்ல; உடனே அவசர சட்டம் போட்டு போலீசுக்கு முழு அதிகாரமும் தந்தால்தான் வெடிகுண்டு கலாச்சாரம் ஒழியும்'' என்று பேசியதோடு மணிரத்னம் ஏதோ நிரபராதி, அப்பாவி போல சித்தரித்து, எதிரானவர்களை ''விசாரணையின்றித் தூக்கிலிடுங்கள்'' என்றும் பேசியுள்ளார். இது பாசிச சிந்தனையின் வெளிப்பாடே!

ரஜினிக்கு ஜெயலலிதாவைப் போலவே எந்த ஒரு தனிப்பட்ட அரசியல் கொள்கையோ, நெறியோ, வழியோ கிடையாது. அரசியல் விவகாரங்களில் ஜெயலலிதா ஒரு ''அரைவேக்காடு'' என்றால் ரஜினி ஒரு ''பூஜ்ஜிய'' நிலை. அதனால்தான் ஜெயாவின் ஆட்சி சட்ட - ஒழுங்கு நிலைமையைக் கண்டித்த பேச்சிலேயே அதற்கு முரண்பாடாகத் தமிழக போலீசு திறமை பற்றி பாமரத்தனமாக புகழ்ந்து பேசுகிறார். இதேபோல் ஆந்திர தெலுங்கு தேசக் கட்சிப் பிளவில் தலையிட்டு சிவபார்வதியைக் கண்டிக்கிறேன் பேர்வழியென பொதுவாக பெண்களையே இழிவுபடுத்திப் பேசினார், ரஜினி. இதற்கு ஆந்திராவிலுள்ள பெண்கள் அமைப்பினர் கண்டித்து அறிக்கை வெளியிட்டனர்.

ரஜினி, ஜெயாவைக் குறிவைத்து நேரடியாக தாக்கிப் பேசாது இருக்கும் வரை ஜெயாவுக்கும் ரஜினியைத் திருப்பித்தாக்க அவசியம் ஏற்படப்போவதில்லை. சுப்பிரமணியசாமி - சந்திரலேகா கும்பல் மீது ஆட்களை ஏவி அமிலம், முட்டை, செருப்பு வீசித் தாக்குகிற ஜெயா, ரஜினிக்கு எதிராக அப்படி ஒரு சிறு துரும்பையும் இதுவரை நகர்த்தவில்லை. வீரப்பன் கும்பல் மீதான ஜெயாவின் நடவடிக்கையைத்தான் ரஜினிக்கு ஏற்பட்ட அவமானமாகவும் பாதிப்பாகவும் சித்தரிக்கிறார்கள். உண்மையில் ஜெயாவால் ஏவப்பட்ட போலீசு மற்றும் கட்சிக் குண்டர்களால் தாக்கப்பட்டு, பாதிக்கப்பட்டது ரஜினி ரசிகர்கள்தான். இவர்கள் காயங்களோடு வந்து ரஜினியி

ரஜினியின் காலடியில் படித்தவர்களும் ரசிகர்களாக; வெட்கக்கேடு!




படிப்பகம்

www.padippakam.com

டம் முறையிட்டபோது ரஜினியின் உப தேசம் என்ன தெரியுமா? "போலீசுக்கு மதிப்புக் கொடுங்கள்; கட்டுப்பட்டு நடந்து கொள்ளுங்கள்" என்பதே. இது சகிக்க முடியாத ஒன்று. கொலை, கொள்ளை, கற்பழிப்பு, அராஜகம் என ஆட்டம் போடும் தமிழக போலீசிற்குப் பாராட்டும் பதக்கமும் வழங்கும் ஜெயா வுக்கு ரஜினி சளைத்தவரில்லை என்ப தையே நிருபித்திருக்கிறார்.

சக கலைஞன் மணிரத்னம் வீட்டில் நடந்த குண்டு வெடிப்புக்கு கண்டனம் தெரிவித்த ரஜினி, ஜெயா ஆட்சியில் சக மக்கள் படுகிற துன்பங்களில் ஏதாவது ஒன்றிற்கு எதிராக இதுவரை குரல் கொடுத்திருக்கிறாரா? வரலாறு காணாத ஊழலிலும், ஆடம்பரத்திலும், அராஜக - கிரிமினல் நடவடிக்கையிலும் சிறந்து விளங்கும் ஜெயாவிற்கு எதிராக எதுவும் பேசியதில்லை. விலைவாசி ஏற்றத்திலி ருந்து கிரிமினல்களின், போலீசின் கற்ப ழிப்பு, கொலைகள் வரை மக்கள் பாதிப் புக்கு எதிராக ரஜினி வாயசைத்தது கூட இல்லை. ஏன் தன்னைப் போலவே சென்னை மக்கள் ஜெயாவின் பாதுகாப்பு கெடுபிடிகளால் போக்குவரத்து தடுக்கப் பட்டு பல மணி நேரம் காத்துக் கிடந்து அவதிப்படுவதற்கு எதிராகக் கூட ஒரு கண்டனம் தெரிவிக்கவில்லை. ரஜி னியை ஜெயா கும்பலின் பிழைப்புவாத - பொறுக்கி - ஊழல் - அராஜக நடவடிக் கைகளுக்கு மாறுபட்ட நபராகவும் எதிர்ப் பாளராகவும் அடக்கம் - ஆன்மீகம் - நேர்மை - மக்கள் பற்றுள்ள பண்பாளராக வும் சித்தரிப்பது அபத்தம்.

ரஜினியின் அடக்கம் - ஆன்மீகம் - அமைதிவழி - அஹிம்சை வழி என்ப தெல்லாம் ஆர்.எஸ்.எஸ். கும்பலின் இந் துவெறி பாசிச கருத்தோடு ஒன்றிப்போகி றது என்பதுதான் உண்மை. "வன்முறை கூடாது; அமைதி வழியைக் கடைபிடி யுங்கள்" என்று ரஜினி உபதேசம் செய்த போதெல்லாம் போலியான தேச ஒற் றுமை, நாட்டுப்பற்றை வலியுறுத்தியே பேசியுள்ளார். மேலும், இதற்காக ரஜி னியை ஆர்.எஸ்.எஸ். கும்பல் ஆதரித்து வருவதையும் இந்துவெறி பாசிச பிரச்சா ரகர்களான ஜீ.வி., மணிரத்னம் போன்ற பார்ப்பன கும்பல் மற்றும் இன்னொரு பாசிசக் கட்சியான காங்கிரசுக்காரர்கள் தான் ரஜினியின் நெருங்கிய நண்பர்கள் என்பதையும் கவனிக்க வேண்டும். ரஜினி, இராம. வீரப்பன், திருநாவுக்கரசு கும்பலுடன் கூட்டுச் சேர்வது மட்டும் தான் ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்குப் பிடிக் கவில்லை.

ரஜினியிடம் உள்ள கருத்துக்கள் ஆர்.எஸ்.எஸ். கும்பலின் பாசிச கருத் துக்கு அடிப்படையாகவும் கருவாகவும் இருந்தாலும், எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா வைப் போல தமிழக அரசியல் தேவைக் கேற்ப திராவிட இயக்க அரசியல் சாயத் தையும் பூசிக் கொண்டு நாடகமாடுகிற தன்மையும் உண்டு. எனவே, எம்.ஜி. ஆர்., ஜெயாவிற்கு அடுத்த புதிய பரி ணாம வளர்ச்சியாக ரஜினி "திராவிடக் கொள்கைகளை"க் குழிதோண்டி புதைக் கவே செய்வார்.

இருக்கின்ற அரசியல் கட்சிகள் மீதெல்லாம் மக்கள் நம்பிக்கை இழந்து விட்டால் புதிய புதிய வண்ணத்தில் நபர் களை - கட்சிகளை ஆளும் வர்க்கங்கள் தோற்றுவிக்கவோ, ஆதரிக்கவோ செய் யும். ஜெயா கும்பலின் கொட்டத்தை அடக்க - முறியடிக்கக் கூடிய வண்ணம் எதிர்க்கட்சிகள் திராணியற்று - மக்கள் ஆதரவற்று இருக்கின்ற இன்றைய தமி ழக அரசியல் நிலைமை புதிய மாற்று ஒன்றைக் கோருகிறது. இந்த இடத்தில் முன்பு வை.கோ-வைப் பொருத்திப் பார்க்கப் புறப்பட்ட ஒரு பிரிவினர் போல் இன்று ரஜினியைப் பொருத்தி வீரப்பன் - திருநாவுக்கரசு வகையறாக்கள் ஆளும்

★ ரஜினி - அடிப்படையில் ஒரு ஆர்.எஸ்.எஸ்.-காரன்

★ வீரப்பன் - பொறுக்கி அரசியலின் மொத்த வியாபாரி

★ சூப்பர் நடிகனும் சூப்பர் தரகனும் கூட்டு

வர்க்கங்களுக்குச் சேவை செய்து ஆதாய மடையத் துடிக்கின்றன. இவர்களுடன் காங்கிரசு மட்டுமல்ல ஜெயாவுக்கு எதி ரான பார்ப்பன கும்பலும், குறிப்பாக திரைப்படம், பத்திரிகை துறையிலுள் ளோர் ஒருங்கிணைந்து நிற்கிறார்கள்.

இதில் பார்ப்பன ஜெயலலிதாவைப் பார்ப்பனரல்லாத சசிகலா - நடராஜன் கும்பல் கைக்குள் போட்டுக் கொண்டு ஆட்டம் போடுவதால் முரண்பட்டு நிற் கிற பார்ப்பன கும்பல்களும், காங்கிரசு கும்பல்களும் ஜெயாவிற்கு எதிராக ரஜி னியை உசுப்பிவிட்டு சசிகலா கும்பலைப் பழிதீர்த்துக் கொண்டு ஜெயாவைத் தம் பக்கம் இழுக்கவே முயல்கின்றன. வீரப் பன் - திருநாவுக்கரசு கும்பல்களோ ஜெயா - சசிகலா கும்பலைப் பழி தீர்த்துக் கொள்ள ரஜினியை அரசியலில் முன்னி றுத்துவதில் தீவிரமாகச் செயல்படுகின் றன. ஜெயலிதா உதிர்த்த ரோமங்கள் எல் லாம் ஒன்று திரண்டு "நாங்கள்தான் எம்.ஜி.ஆரின் வாரிசுகள்" என்றும் "நிகழ்கால எம்.ஜி.ஆர்., ரஜினி" என் றும் கூச்சலிடுகின்றன.

திருநாவுக்கரசு, விசுவநாதன், எஸ். ஆர்.ராதா, ராஜாராம் போன்றோர் எம்.ஜி.ஆர். பெயரை உச்சரித்து கட் சியை உடைத்து ஜெயாவுக்கு நெருக்கடி கொடுக்க முயன்று தோற்றுப்போயினர். இதனால் எம்.ஜி.ஆருடன் ரஜினியை இணைத்துக் கொண்டு ஒன்றுதிரண்டால் பயன் கிடைக்கும் என்று கணக்கு போட்டு எலியும் பூனையும் போலிருந்த வீரப்பனும் திருநாவுக்கரசும் வெட்கங் கெட்டு கரம் கோர்த்துள்ளனர்! 1972-இல் தி.மு.க.விலிருந்து பிரிந்த போது எம்.ஜி., ஆருக்கு 'கணக்குப் பிள்ளையாக' இருந்து பணியாற்றியதில் நேர்மறையாக வும் ஜெயா - ஜானகி சக்களத்தி சண்டை யில் ஜானகிக்குப் பக்கபலமாக இருந்து செயல்பட்டதில் எதிர்மறையாகவும் வீரப்பனுக்கு கிடைத்த படிப்பினை: தமி ழக அரசியலில் முடிசூட ஒரு புகழ் - கவர்ச்சி மிக்க திரைப்பட நடிகர் தேவை என்பதுதான்.

ஜெயலலிதாவை எதிர்த்து முறிய டிக்க ஒரு கவர்ச்சி நாயகன் கிடைத்து விட்டால் போதுமா? எம்.ஜி.ஆர். விசு வாசி போலக் காட்டியும் ஜெயாவை வீழ்த்த முடியாமைக்குக் காரணம் பொறுக்கி, கிரிமினல், அரசியல் கழிசடை களுக்கு ஜெயா அகலக்கதவு திறந்து விட் டுக் காலூன்றி நின்றதால்தான். கருணா நிதி ஆட்சி தொடங்கி பொறுக்கி- கிரிமினல் அரசியல் தமிழகத்தில் கோலோச்சுகிறது என்றாலும் ஜெயா ஆட்சியில் அது வளர்ந்த - முதிர்ந்த பரு வத்தை அடைந்தது. இதனுடன் போட்டி யிட்டால்தான் இன்று யாரும் அரசியலில் குப்பை கொட்ட முடியும் என்ற நிலை உருவாகியுள்ளது. பொறுக்கி - கிரிமினல் அரசியலில் ஜெயா கும்பலைச் சேர்ந்த எஸ்.டி.எஸ்., மதுசூதனன், கண்ணப்பன், ஜெயக்குமார், ஆதிராஜாராம் போன்ற கழிசடைகளோடு போட்டியிடுகிற தகுதி நிச்சயம் வீரப்பன், மாதவன், திருநாவுக்க ரசு வகையறாக்களுக்கு உண்டு. ஒரே குட் டையில் ஊறி; பயிற்சி பெற்ற மட்டைகள் தானே! ஆனால் ஜெயா கும்பல்தான் ஊழல், அராஜகம், அடாவடித்தனத்திற் குரியவர்கள் போலும் தம்மைத் தூய்மை யானவர்களாகவும் காட்டிக் கொள்கிறார் கள்.

எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் வீரப்பன், முத்துசாமி, மாதவன், காளி முத்து முதலியோர் ஒரு அணியாகவும் ஜெயலலிதா, திருநாவுக்கரசு, பண்ருட்டி இராமச்சந்திரன் முதலியோர் ஒரு அணி யாகவும் மோதிக் கொண்டு ஒருவருக் கொருவர் ஊழல் குற்றஞ்சாட்டி காலை



படிப்பகம்

www.padippakam.com

வாரி விட்டுக் கொண்டனர். இதில் இராம வீரப்பன் புதுக்கோட்டையில் திரைய ரங்கு, ''ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்'' கட்டிய தில் அரசு எந்திரங்களை முறைகேடாகப் பயன்படுத்தியதும், மருமகன் மற்றும் மகன் பெயரில் கறுப்பு பணத்தை திரைப் படங்களில் மூலதனமிட்டதும் சந்தி சிரித் தது. நகராட்சியின் சுற்றுலாத்துறை தலை வராக இருந்த இவரது மருமகன் புரிந்த ஊழலுக்கும் தனது கோஷ்டியைச் சேர்ந்த ராபின் மெயின் புகழ் காளிமுத்து முதல் வீட்டுவசதி வாரிய மோசடி புகழ் திருப் பூர் மணிமாறன் வரை பலருக்கும் பாதுகா வலராக வீரப்பன் விளங்கினார். திருநா வுக்கரசின் எம்.எம்.டி.ஏ. ஊழலை அன்று வீரப்பனே தாக்கி பேசினார். முத் துசாமியுடன் சேர்ந்து எம்.ஜி.ஆரின் மருத்துவ செலவுக்காக வந்த நன்கொ டையில் 3 கோடி ரூபாயை மாதவன் சுருட்டினார் என்று திருநாவுக்கரசு அன்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

வீரப்பன் - திருநாவுக்கரசு கும்ப லின் ரவுடித்தனத்தை, ஜானகி - ஜெயா சக்களத்தி சண்டை நடந்த போது மோதிக் கொண்ட காட்சிகளே வெளிச்சம் போட் டுக் காட்டப் போதுமானவை. எம்.எல். ஏக்களை விலை பேசி அடைத்து வைத்த தும், விமானத்தில் கடத்திக் கொண்டு பறந்ததும், சட்டசபையில் மைக், மண் டைகளை உடைத்துக் கட்டிப் புரண்டதும் அறிவோம். அதற்குப் பின்னே நடந்த தேர்தல் மோதல்களிலும் இரு அணியின ரும் தமது பொறுக்கி அரசியலின் கைவரி சையைக் காட்டியதும் எல்லோருக்கும் தெரிந்ததே.

ரஜினியை முன்னிறுத்துவதில் முக் கியமானவரான இராம. வீரப்பன் பத்திரி கையாளர்களுக்குப் பணத்தை வாரியி றைத்துப் பிரச்சாரம் செய்தாலும் சில கிசு கிசு பத்திரிகைகளும் மறத்தமிழர்களும் வீரப்பனை இட்டுக்கட்டி புகழ்ந்து எழுத வும் செய்கிறார்கள். யார் இந்த இராம. வீரப்பன்?

பொறுக்கி - கிரிமினல் அரசியலின் மொத்த வியாபாரி, திராவிட இயக்கத் தில் 'கொட்டை போட்ட' புகழ்பெற்ற பிழைப்புவாதி, சூழ்ச்சிகள் - சதிகள் மூலம் பலருக்கு ஆதாயம் தேடித்தருகிற அரசியல் தரகர்.

தொடக்கத்தில் திராவிடர் கழகத்தி லும், பின்னர் அண்ணாவின் ''திராவிட நாடு'' பத்திரிகையிலும் பணியாற்றிய வர், 1953-லிருந்து எம்.ஜி.ஆரின் சொத் துக்களுக்கு கணக்குப் பிள்ளையாக வேலை பார்த்தார். தனிக் கட்சி தொடங் கிய பின் எம்.ஜி.ஆருக்கு அரசியல் பணி களிலும் உதவுகிற நிர்வாகியாக மாறி 1977-இல் ஆட்சியைப் பிடித்த போது மேலவை நியமன உறுப்பினர் மூலம் மந் திரியுமானார். மேலவை கலைக்கப்பட்ட பின்னர் ஆட்சி, பதவி, செல்வாக்கு மூலம் அரசு எந்திரத்தை முழுவதுமாகப் பயன்படுத்தியே திருநெல்வேலியில் வெற்றி பெற்று அமைச்சராக நீடித்தார். ராஜீவ் கொலை அனுதாப அலையில் ஜெயா கும்பலின் கழிசடைகளோடு - பத்தோடு பதினொன்றாக எம்.எல்.ஏ. ஆனாரே ஒழிய ஆர்.எம். வீரப்பனுக் கென்று தனிப்பட்ட செல்வாக்குள்ள தொகுதி எதுவுமில்லை; மக்கள் திரள் தலைவரும் இல்லை. எம்.ஜி.ஆருக்கு நம்பகமானவர் என்ற முறையில் கட்சியி லுள்ள பிறர் காரியம் சாதித்துக் கொள்ள இவரை ஒரு இடைத்தரகராகவே பயன்ப டுத்தினர். பொய்கள் - சதிகள் - சூழ்ச்சி கள் கொண்ட தரகு வேலைகள் மூலமே கட்சியிலுள்ள பல முக்கிய நபர்களை அர வணைத்துக் கொண்டு கோஷ்டி கட்டி னார்.

ஜெயலலிதாவை ''வசந்தசேனை'' என்றும் ''காங்கிரசாரின் கைக்கூலி'' என் றும் தாக்கிய வீரப்பன் தன்னை திராவிட பாரம்பரிய சுயமரியாதைக்காரராகவும் தமிழின மொழிப் பற்றாளராகவும் சித்த ரித்துக் கொண்டார். திராவிட இயக்க



அரசியல் தரகர் இராம.வீரப்பன்

கொள்கையான சுயமரியாதைக்கும், இந்தி எதிர்ப்புக்கும் குழிதோண்டி புதைத் தவர்களில் வீரப்பனும் முக்கியமான ஆள். இந்தி திணிப்பின்போது வக்கா லத்து வாங்கிப் பேசியதும் அண்மையில் ஒரு ஆன்மீகப் புத்தகம் வெளியிட்டதை யும் கொண்டே இவருடைய தமிழ் மொழி - இனப் பற்றைப் புரிந்து கொள்ள முடியும். இந்து அறநிலையத் துறை அமைச்சராக இருந்த போது கோயில்க ளும், பூசாரிகளும், சனாதனிகளும், பங் காரு போன்றவர்களும் பொலிவு பெற்ற தைக் கண்டு அன்று அவருக்கு ''வீரப்ப ஆழ்வார்'' என்று சிறப்பு பட்டமும் கிடைத்தது. ''ஆர்.எம்.வீ. ஓர் ஆலயம்'' என்று வலம்புரி ஜான் வெளியிட்ட புத்த கமே போதும் வீரப்பனாரின் தெய்வபக் திக்கும், தரகர் வேலைக்கும் சான்று பகர; ஒரே ஒரு உதாரணம்:

''தமிழகத்தை விட்டு வெளி மாநி லங்களுக்குச் சென்றிருந்த காமகோடி பெரியவர்களை தமிழகத்திற்கு வர வேண்டுமென்று வேண்டிக் கொண்டவ ரும், ஆந்திர எல்லைக்குச் சென்று பணிவு டன் வரவேற்று உபசரித்தவரும் அமைச் சர் ஆர்.எம்.வீ என்பதை மறந்து விட முடியுமா? அன்று அவர் கடவுளைக் கண் டேன் என்று பேசிய பேச்சு என் காதில் இன்றும் ஒலித்துக் கொண்டிருக்கிறது''. (பக்-61)

பதவி, பணத்திற்காக எதையும் இழக்கத் தயாராக இருக்கும் பிழைப்புவா தியான ஆர்.எம்.வீ., எந்த ஜெயலலி தாவை கண்டபடி திட்டினாரோ அவரது பின்னே நாய் போல் நாக்கைத் தொங்க விட்டுக் கொண்டிருந்தார். கடைசி வரை ஜெயாவின் உண்மையான விசுவாசி என்று கூறி வந்தார். அதேபோல் கவர்ச் சிக்காக மயங்குகிற கூட்டம் தான் ஜெயா பின்னால் திரண்டதாக அன்று தாக்கிப் பேசிய வீரப்பன், இன்று ரஜினியின் கவர்ச்சி கூட்டத்தைக் கண்டு மயங்கி புதிய கடை விரிக்கிறார். காங்கிரசுடன் உறவு கொண்ட ஜெயாவை தாக்கிய அதே வீரப்பன்தான் இன்று காங்கிரசுட னும் கைகோர்க்க பேரம் நடத்திக் கொண் டிருக்கிறார்.

இத்தகைய பொறுக்கி - கழிசடை - பிழைப்புவாதக் கும்பலுடன் கவர்ச்சி நாயகன் ரஜினியும் கைகோர்த்துக் கொண்டு வந்து நிற்பதற்கான அடிப்ப டைகள் இங்கு உள்ளன. பொறுக்கி அரசி யலும் இதன் பண்பாட்டு வெளிப்பாடாக ஒழுக்கமற்ற - மேலை நாட்டு சீரழிந்த கலாச்சாரமுமே ரஜினி - வீரப்பன் கும்ப லைக் கட்டியங்கூறி அழைக்கிறது. நகர்ப் புற உதிரி பாட்டாளிகளும் கிராமப்புற பாமர விவசாயிகளும்தான் கவர்ச்சிக்கு மயங்கி கருணாநிதி, எம்.ஜி.ஆர்., ஜெய லலிதாவின் பொறுக்கி - கிரிமினல் அரசி யலுக்கு சமூக அடிப்படையாக விளங்கு கிறார்கள். இவர்கள்தான் ரஜினி அரசிய லுக்கு வர விரும்பும் ரசிகர்கள் என்றா லும் இதில் உதிரிப்பாட்டாளிகளும், உதி ரிபாட்டாளி வர்க்க கலாச்சாரத்திற்கு அடி மையான நடுத்தர மக்களும்தான் கணிச மானோர்.

தமிழ்த் திரையுலகில் முதல் கதாநா யகனாக இருந்து ரஜினி பரப்பியது சீர ழிந்த மேலைநாட்டு - உதிரி பாட்டாளி வர்க்க கலாச்சாரத்தைத்தான். வில்லனை ஒழிப்பதற்கு அல்லது அடக்குவதற்கு எந்த ஒழுங்குக்கும் வரையறைக்கும் உட் படாத அதே வில்லன் போன்ற ஒரு கதா நாயகனாகவே பெரும்பாலும் ரஜினி திரைப்படங்களில் தோன்றியுள்ளார். ஒழுக்கமற்ற கலாச்சாரத்தைப் (Amoralism) பரப்பிய கதாநாயகன் ரஜினி, எந்த ஒழுங் கும், வரைமுறையுமற்ற பொறுக்கி அரசி யலின் நாயகனாக மாறுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

● மாதவன்



படிப்பகம்

www.padippakam.com




● *ம.க.இ.க., பு.மா.இ.மு., வி.வி.மு. ஆகிய அமைப்புகள் சேர்ந்து நடத்திய இறால் பண்ணை அழிப்புப் போராட்டம் பொருளாதாரப் போராட்டம் என்று ம.ஜ.இ.க-வினர் கூறுகிறார்களே, இது சரியா? இதேபோல, கருவறை நுழைவுப் போராட்டம் ஒரு அரசியல் போராட்டமல்ல, கடவுளை எதிர்த்துப் பெரியார் நடத்திய நாத்திகப் பிரச்சாரம் போன்ற ஒரு போராட்டம் தான் என்றும் அவர்கள் கூறுகின்றனர், இதுவும் சரியா?*

★ பாசிச, இந்துமதவெறி பாசிச சக்திகளை எதிர்த்து முறியடிப்பதும், நாடு மறுகாலனியாக்கப்படுவதை எதிர்த்து முறியடிப்பதும் நமது செயல் தந்திர அரசியல் நடத்தை வழியாக உள்ளது என்பதை நாம் திரும்பத் திரும்ப எழுதியிருக்கிறோம். அதன் ஒரு பகுதியாகத்தான் கருவறை நுழைவுப் போராட்டமும், இறால் பண்ணை அழிப்புப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டன. உள்நாட்டு பாசிச, இந்து மதவெறி பாசிச சக்திகளையும், ஏகாதிபத்தியத் தரகர்களையும் குறிவைத்துத் தாக்குவதிலும், இடைத்தட்டு சமரச சக்திகளைத் தனிமைப்படுத்துவதிலும், நமது அரசியல் நடத்தை வழி முக்கியமான வெற்றியை ஈட்டியது. சரியான அரசியல் நடத்தை வழியும், சரியான அரசியல் முழக்கமும் கணிசமான அளவு மக்கள் ஆதரவை அப்போராட்டத் தலைமையின் கீழ் திரட்டுவதையும் சாதித்துக் காட்டின. அரசியல் போர்த் தந்திரம், செயல் தந்திரங்கள் பற்றிய கோட்பாடுகளையே ஏற்காது, வெறும் போர்க்குணமிக்க பொருளாதாரவாத சவடால் அடித்துக் கொண்டிருந்தவர்கள்தான் இந்த ம.ஜ.இ.க. தலைமையினர். பத்தாண்டுகளுக்கு முன்பே திடீர் ஞானோதயம் பெற்றாலும் அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிக்கும் வகையில் அவ்வப்போது சில ''அரசியல்'' முழக்கங்களை வைத்துச் சுவரொட்டிகள் போடுவதையே அரசியல் இயக்கமாகக் கருதுகிறார்கள். அரசியலற்ற கண்ணோட்டத்தில் இருந்து பார்க்கும்போது கருவறை நுழைவுப் போராட்டம் வெறும் நாத்திகப் பிரச்சாரமாகத் தெரியும். ஆனால் இந்துமத பாசிஸ்டுகள், ''அனைத்துச் சாதியினரும் ஒரே தேசியம்'' என்கிற பித்தலாட்டம் செய்து மக்களை ஏய்ப்பதை அம்பலப்படுத்தி - தனிமைப்படுத்த அவர்களது பார்ப்பன - பாசிச அடிப்படையைத் தோலுரித்துக் காட்டுகிறது என்கிற வகையில் கருவறை நுழைவுப் போராட்டம் அரசியல் போராட்டமாகவே உள்ளது. பெரியாரின் கருவறை நுழைவுப் போராட்டம் ஒரு புரட்சிகர அரசியல் செயல் தந்திரம் கொண்டதாக இல்லாவிட்டாலும் வெறும் நாத்திகப் பிரச்சாரம் மட்டுமல்ல; ஒரு சமூக சீர்திருத்த இயக்கம் ஆகும். இறால் பண்ணைகள் நமது விவசாயிகளையும் மீனவர்களையும் நேரடியாகப் பாதிப்பவை என்றாலும் அவை நாடு மறுகாலனியாக்கப்படுவதோடு இணைந்தவை என்பதை உணர்த்தி அனைத்துப் பிரிவு உழைக்கும் மக்களையும் இறால் பண்ணை அழிப்புப் போராட்டத்திற்கு ஆதரவாகத் திரட்டுவதே நமது நோக்கமாக இருந்தது. ஆனால் ம.ஜ.இ.க.வினரது குழு நலப் பார்வை இந்த உண்மைகளைக் காணவிடாமற் செய்கிறது.

● *இந்தியா "காட்" ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடவில்லையெனில் பொருளாதாரத்துறையில் அநேகப் பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் என மிரட்டினார்களே; அப்படிக் கையொப்பம் இடாத நாடுகளின் தற்போதைய நிலை என்ன? அவைகள் மட்டும் எப்படி சமாளிக்கின்றன?*

**வாசகர்வட்டம், வேலூர், வ.ஆ.அ.மா.**

★ கியூபா, வட கொரியா, லிபியா போன்ற சில நாடுகளைத் தவிர அநேகமாக உலகில் உள்ள அனைத்து நாடுகளும் ''காட்'' - ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளன. இவற்றின் சுயாதிபத்தியத்தைப் பறித்துத் தமது காலடியில் போட்டு மிதிக்கவே அமெரிக்கா மற்றும் பிற மேல்நிலை வல்லரசுகள் இடையறாது எத்தனித்து வருகின்றன. இந்த நாடுகளுக்கு எதிராக அமெரிக்கா நேரடியாகவும், ஐக்கிய நாடுகள் சபை மூலமாகவும் பல பொருளாதாரத் தடைகளை விதித்து வருகிறது. ஆனால் முன்னாளைய சோசலிச நாடுகள் என்கிற முறையில் ஓரளவு சுயதேவைப் பொருளாதாரத்தைப் பெற்றிருப்பதால் இந்த நாடுகள் சமாளித்து வருகின்றன அல்லது எண்ணெய் வளநாடுகளாக இருப்பதால் அதை வைத்தும் ஆயுத விற்பனைக்காக வல்லரசு நாடுகளுக்கிடையே நிலவும் போட்டியைப் பயன்படுத்தியும் பொருளாதார முற்றுகையைச் சமாளித்து வருகின்றன. ஆனால், இந்த நாடுகளது பொருளாதாரப் பிரச்சினைகளைவிட ''காட்''டின் புதிய அவதாரமான உலக வர்த்தக நிறுவனம் (WTO) சர்வதேச நிதி நிறுவனம் (IMF) மற்றும் உலக வங்கி (WB) யின் ஆணையின் கீழ் மெக்சிகோவில் நடந்ததைப் போல பின்தங்கிய உலக நாடுகள் அனைத்தினது பொருளாதாரமும் திவாலாகி வருவதுதான் சமாளிக்க முடியாதவை. ஏகாதிபத்திய வல்லரசுகள், அவற்றின் நிதி-வர்த்தக அமைப்புகள் மற்றும் தேசங்கடந்த தொழில் - வங்கிக் கழகங்களுக்கெதிராகப் பின்தங்கிய நாடுகள் ஒருவருக்கொருவர் பரந்த கூட்டணி அமைத்துப் போராடுவது, தமது சொந்த நாட்டில் சுயசார்புப் பொருளாதாரத்தைக் கட்டி வளர்ப்பது ஆகியவற்றின் மூலமே இந்தப் பிரச்சினைகளைச் சமாளிக்க முடியும். ஆனால் இந்த நாடுகள் காலனிய, அரைக்காலனிய, நவீன காலனிய நாடுகளாகவும் தரகு முதலாளித்துவப் பொருளாதாரத்தைக் கொண்டவையாகவும் ''காட்'' ஒப்பந்தத்தை ஏற்பதை நியாயப்படுத்துகின்றன. அப்படித்தான் இந்தியாவும். ''காட்'' ஒப்பந்தம் மூலம் உலகமயமாகும் பொருளாதாரத்துடன் இந்தியா பிணைக்கப்படும். இதனால் அந்நிய மூலதனம் அதிகரித்த அளவில் முதலீடு செய்யப்படும்; தொழில் - வர்த்தகம் பெருகி வேலை வாய்ப்பு அதிகரிக்கும்; புதிய தொழில் நுட்பங்கள் வந்திறங்கும்; நமது தொழில்கள் சர்வதேச சந்தைப் போட்டிக்குத் திறந்து விடப்படுவதால் இவற்றின் தரம் உயரும் என்று அடுக்கினர். ஆனால் அந்நிய மூலதனம் எதிர்பார்த்த அளவு வரவில்லை; ஏற்றுமதியும் பெருகவில்லை; புதிய தொழில்கள் துவங்குவதற்குப் பதில் சேவைத்துறையில் புகுந்தும், ஏற்கனவே உள்ள விற்பனைப் பண்டங்களுக்கே அந்நியப் பதிவுப் பெயர்களிட்டும் கொள்ளையடிப்பதும் காலாவதியான தொழில் நுட்பங் கொண்ட பழைய ஆலைகளையும் நச்சுக் கழிவு ஆலைகளையுமே கொண்டு வந்து திணிக்கின்றனர்; போட்டி மூலம் வருவதற்குப் பதில் இரகசிய பேரங்கள், லஞ்ச ஊழல் மூலமே வருகின்றனர்; மாட்டுச் சாணம், கோழிக்கறி போன்ற வேண்டாத பொருட்களையே கொண்டு வந்து கொட்டுகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

# காசி-மதுரா விவகாரம்:
# அயோத்தி வழியில் தாக்குதல் ஒத்திகை

அயோத்திக்கு அடுத்து எங்கள் இலக்கு மதுரா, காசி என்று கொக்கரித்த இந்துவெறியர்கள் அதற்கான பயணத்தைத் தொடங்கி விட்டார்கள். உ.பி.யில் பாபர் மசூதியை இடிப்பதற்கு அன்று பா.ஜ.க.-வின் கல்யாண்சிங் அரசு சாதகமாக இருந்தது; இன்று மதுரா, காசி இயக்கத்தை நடத்துவதற்கு பா.ஜ.க. ஆதரவு பெற்ற பகுஜன் சமாஜ் கட்சியின் மாயாவதி அரசு உறுதுணையாக நிற்கிறது. எதிர்வரும் பொதுத் தேர்தலைக் குறிவைத்து ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள், இந்து மதவெறியைத் தூண்டி ஆதாயம் அடைய முயல்கின்றன என்றாலும் மாநில ஆட்சியிலுள்ள சாதகமான நிலைமைகளைப் பயன்படுத்திக் கொண்டு காசி, மதுரா இயக்கங்களுக்கான அஸ்திவாரத்தைக் கட்டியமைத்துப் பலம் பெறத் திட்டமிட்டுள்ளன.

காசி விசுவநாதர் ஆலயமும் கியான்வாபி மசூதியும் இணைந்துள்ள வாரணாசியில் மூன்று பூஜைகளையும், கேசவதாஸ் கோயிலும் சஹாஹி மசூதியும் இணைந்துள்ள மதுராவில் மகா விஷ்ணு யாகம் என்ற ஒன்றையும் இந்து வெறி பரிவாரங்கள் நடத்தியுள்ளன.

இந்து நாட்காட்டிபடி காசி விசுவநாதர் கோயிலில் மசூதி மதில் சுவரை ஒட்டியுள்ள சிரிங்கார் கௌரி சிலைக்கு சைத் மாதம் தவிர (நவராத்திரி விழா வரும் மாதம்) பிற மாதங்களில் பூஜை செய்யக்கூடாது என்றும் கோயிலைச் சுற்றி வழிபடுவதில் மசூதி பகுதியையும் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்றும் 1942-இல் நீதிமன்றம் உத்தரவிட்டது. 1942-க்குப் பின் இவை கடைபிடிக்கப்பட்டு இந்து - முஸ்லீம்களிடையே எவ்விதப் பிரச்சினையும் எழுந்ததில்லை. ஆனால் விசுவ இந்து பரிசத் கும்பல், மசூதி இருக்கும் இடமும் விசுவநாதர் கோயிலுக்குரியது என்று பிரச்சினை கிளப்பி வருவதோடு நீதிமன்ற உத்தரவை மீறி, மசூதி பகுதியிலும் சுற்றி ஊர்வலமாகச் செல்வது, ஸ்ரவான் மாதத்திலும் (அதாவது ஜூலை மாதத்தில் 17, 24, 31 ஆகிய தேதிகளில்) சிரிங்கார் கௌரி சிலைக்கு ''ஜலாபிஷேகம்'' நடத்துவது என அத்துமீறி செயல்பட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவை மீறிய இந்த அராஜகத்திற்கு மாநில போலீசு பாதுகாப்பு கொடுத்தது. 31-ந் தேதி அசோக்சிங்கால் தலைமையில் திரளத் திட்டமிட்டதைச் சுட்டிக் காட்டி முஸ்லீம்களும், பிற மத சார்பற்ற இயக்கங்களும் தடுக்கக் கோரியும் மத்திய, மாநில அரசுகள் தடுக்கவில்லை. இதனால் முஸ்லீம்கள் அன்று மசூதிக்குள் திரண்டு பாதுகாப்பாக அமர்ந்திருந்தனர். சமாஜ்வாடி கட்சியினர் எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

மதுராவில் கேசவதாஸ் கோயில் மற்றும் சஹாஹி மசூதி தொடர்பாக இரு கமிட்டிகளுக்கும் இடையில் 'சுதந்திர'த்திற்குப் பின்னே ஒரு ஒப்பந்தம் போடப்பட்டு அது முதல் பிரச்சினையின்றி இரு மதத்தினரும் நல்லிணக்கத்துடன் பழகி வழிபட்டு வருகிறார்கள். ஆனால் மசூதி உள்ள இடம் கிருஷ்ணர் பிறந்த இடம் என்றும் ஔரங்கசீப் அங்கிருந்த இந்துக் கோயிலை இடித்து மசூதி கட்டியதாகவும் மாற்றாக மசூதியை இடித்து கிருஷ்ணர் கோயில் அங்கு கட்ட வேண்டும் என்றும் வி.இ.ப. இந்து வெறியூட்டி வருகிறது. புராணங்களின் கற்பனை கடவுள் கிருஷ்ணன் இங்கு பிறந்ததாகக் கூறுவது கட்டுக்கதை. ஔரங்கசீப் இடித்த இந்துக்கோயில்களில் இதுவும் ஒன்றா என்பது விவாதத்திலுள்ள பிரச்சினை; உரிய ஆதாரங்கள் இல்லை. தற்போதுள்ள கிருஷ்ணர் கோயில் 1964-இல் கட்டப்பட்டதுதான். அதற்கு முன்பு அங்கு 25 அடிக்கு ஒரு இடிந்த கட்டிடம் மட்டுமே இருந்தது. எனவே இந்து வெறியர்கள் பாபர் மசூதி வளாகத்தில் செய்தது போல் இங்கும் போலி ஆதாரங்களைப் புதைத்து வைக்க முயல்வர்; அதற்கு முகாந்திரமாக தற்போது கிருஷ்ணர் சிலைகள் மசூதியுள்ள இடத்தில் புதைந்திருப்பதாகக் கூறி வருகின்றனர்.

''கிருஷ்ண ஜென்ம பூமியை விடுதலை செய்வோம்'' என்று கொக்கரித்துக் கொண்டு ஆகஸ்டு 21-ந் தேதி கோயில் - மசூதி வளாகத்திலிருந்து 4 கி.மீ. தூரம் தள்ளி ஒரு மைதானத்தில் யாகம் ஒன்றை வி.இ.ப. கும்பல் நடத்தியது. கோயில் - மசூதி வளாகத்திலேயே யாகத்தை நடத்தத் திட்டமிட்டு பலத்த எதிர்ப்பு வந்ததன் காரணமாகவும் மத்திய காங்கிரசு அரசு மதசார்பின்மை வேடமிட்டு வந்து தடுக்கும் நடவடிக்கை மேற்கொண்டு ஆட்சியைக் கலைப்போம் என்று மிரட்டல் விட்டதன் காரணமாகவும் மாற்றப்பட்டது. தேர்தல் வரை பா.ஜ.க. ஆதரவிலான பகுஜன் சமாஜ் கட்சி ஆட்சி நீடிக்க வேண்டும் என ஆர்.எஸ்.எஸ். கும்பல் விரும்பியதன் காரணமாக விட்டுக் கொடுத்து வேறு ஒரு மைதானத்தில் யாகத்தை நடத்தி முடித்தனர். யாகம் நடந்த அன்று மத்திய பாதுகாப்பு படை பெருமளவு குவிக்கப்பட்டு தெருவில் நடமாட்டமே தடுக்கப்பட்டு மக்களுக்குத் தொல்லை கொடுக்கப்பட்டது. வி.இ.ப. குண்டர்களோ ஆயிரத்திற்கும் குறைவானவர்கள் (எதிர்பார்க்கப்பட்டது 50,000 பேராம்) மாநில போலீசு பாதுகாப்புடன் குறிப்பிட்ட மைதானத்தில் தொல்லைகளின்றி திரண்டனர். கோயில் - மசூதி வளாகத்தைச் சுற்றியுள்ள கடை வியாபாரிகள் மற்றும் குடியிருப்புவாசிகள் அனைவரும்

**மதுராவில் வி.இ.ப. குண்டர்கள் நடத்திய யாகம்; மக்களிடம் வரவேற்பில்லை.**





படிப்பகம்

www.padippakam.com

இந்து - முஸ்லீம் வேறுபாடின்றி வி.இ.ப.-வின் "யாக" நடவடிக்கையைக் கண்டித்தே பத்திரிகைகளுக்குப் பேட்டியளித்துள்ளனர்.

கிருஷ்ணர் யாதவர்களின் கடவுள்; யாதவர்கள் பெரும்பாலும் முலயாம் சிங் தலைமையிலான சமாஜ்வாடி கட்சியின் ஆதரவாளர்கள் என்பதாலும் வி.இ.ப.-வின் மகாவிஷ்ணு யாகத்திற்கு மதுராவில் வரவேற்பு இல்லை. மேல்சாதிக்காரர்களும் ஏன் இந்து மதவெறி அமைப்புகளில் உறுப்பினர்களாக உள்ள பார்ப்பனர்களும் கூட இந்த இயக்கத்திற்கு பெருமளவிற்கு ஆதரவாக இல்லை. வெளியூரிலிருந்து திரட்டப்பட்ட தீவிர உறுப்பினர்கள் மட்டுமே இந்த யாகத்தில் கலந்து கொண்டுள்ளனர். அயோத்தி - இராமர் இயக்கம் போல் பரந்துபட்ட ஆதரவு திரட்ட முடியாது என்பதைப் புரிந்து வைத்துள்ள இந்துவெறி கும்பலின் தலைமை மதுரா பிரச்சினையோடு காசியையும் சேர்த்துக் கொண்டு ஒரே சமயத்தில் இயக்கம் எடுத்து வருகிறது. காசியில் கோயிலைச் சுற்றியுள்ள வியாபாரிகள் பா.ஜ.க. ஆதரவாளர்கள் என்றாலும் வி.இ.ப.-வின் "ஜலாபிஷேக்" இயக்கத்தைத் தடுக்கும்படி கோரி பிரதம மந்திரிக்கும், ஜனாதிபதிக்கும் தங்கள் பிரதிநிதிகள் மூலம் நேரில் மனு கொடுத்துள்ளனர். யாதவர் அல்லாத பிற மேல்சாதியினரையும் கவரும் நோக்கில்தான் விசுவநாதர் கோயில் இயக்கத்தையும் உடன் சேர்த்துக் கொண்டு வலிந்து எடுத்து வருகிறது, ஆர்.எஸ்.எஸ். கும்பல். அதே சமயம் உ.பி. நிலைமைக்கேற்ப - பெரும்பான்மை பெறுவதற்காக சமாஜ்வாடி பின்னுள்ள யாதவர்களைத் தம்பக்கம் கவரும் நோக்கில் மதுரா இயக்கத்திற்கு அழுத்தம் கொடுக்கவும் செய்கிறது.

"அயோத்தியில் இராம ஜென்ம பூமி இயக்கத்தை எடுத்த தொடக்க காலத்தில் அங்கும் இதே நிலைமைதான் இருந்தது. பகுதி மக்கள் எங்களை வரவேற்கவில்லை; போகப் போக தொடர்ச்சியாக செயல்பட்ட பின்தான் ஆதரிக்கத் தொடங்கினர்; பயனைப் புரிந்து கொள்ளத் தொடங்கினர்; எங்களுடன் இணைந்தனர். மதுராவிலும் இம்மாற்றம் நிகழ்வதைப் பார்க்கத்தான் போகிறீர்கள். இந்து மதத்திற்குள் சாதிரீதியாக மக்கள் பிரிந்திருப்பது எதிரிகளுக்குத்தான் (முஸ்லீம்களுக்கு) பலத்தைக் கொடுக்கும். எனவே அனைத்துச் சாதியினர் மத்தியிலும் எங்கள் இயக்கத்துக்கான அடித்தளத்தை உருவாக்குவதுதான் எங்கள் குறிக்கோள். காசி, மதுரா மசூதிகளைச் சுற்றி மக்களிடையே எங்களுக்கான அமைப்புகளையும் அடித்தளத்தையும் உருவாக்க முடியும் என நம்புகிறோம். எங்களுடைய எதிர்காலத் திட்டத்திற்கு (வேறென்ன மசூதியை இடிப்பதுதான்) இவை பெரிதும் உதவியாக இருக்கும்" என்று வி.இ.ப.-வைச் சேர்ந்த செயல் வீரர்கள், தலைவர்கள் பத்திரிகைகளுக்கு பகிரங்கமாக இந்துவெறியைக் கக்கி பேட்டியளிக்கின்றனர்.

இந்துவெறிக் கும்பல் கூறுவது உண்மைதான்! 1984-இல் இராம ஜென்ம பூமி இயக்கத்தை இக்கும்பல் எடுக்கும் போது அயோத்தியில் இவர்களுக்கென்று ஒரு முறையான அலுவலகம்கூட இல்லை. தொடர்ச்சியான போக்கில் இந்து பக்தர்களிடையே ஊடுருவி புதிய, புதிய இந்து அமைப்புகளை உருவாக்கினார்கள். வெளியூரிலிருந்து இந்துவெறி குண்டர்களைக் கொண்டு வந்து இந்து முஸ்லீம் மோதலை நிகழ்த்தும்போது உள்ளூர் மக்கள் மதவாரியாகப் பிரிந்து, இந்துக்கள் பாதுகாப்பிற்காக இவர்கள் பின்னே வேறு வழியின்றி திரள்வது நடக்கிறது. இதைச் சாதகமாக்கிக் கொண்டு பயிற்சி கொடுத்த தமது குண்டர்களை வைத்து மசூதி இடிப்பு, முஸ்லீம்களை வேட்டையாடுவது போன்ற திட்டங்களை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். மற்றொரு புறம் முஸ்லீம்கள், மதவெறியற்ற இந்துக்கள், ஜனநாயக அமைப்புகளின் எதிர்ப்புகளைத் தமது குண்டர் - ரவுடி பட்டாளம், அதிகாரவர்க்கம் மற்றும் அரசு ஆதரவுடன் - பலத்துடன் எளிதில் முறியடித்து வருகிறார்கள்.

பாபர் மசூதி இடிப்புக்குப் பின்னே பா.ஜ.க.-வின் செல்வாக்கு - ஆட்சி உ.பி., மத்தியபிரதேசம், இமாச்சல பிரதேசங்களில் சரிந்ததும், வி.இ.ப. அமைப்பு தடை செய்யப்பட்டதும் ஒரு தற்காலிகப் பின்னடைவுதான் என்பது வெளிச்சமாகிவிட்டது. வி.இ.ப. தடை விலக்கப்பட்டதும், பா.ஜ.க. குஜராத்தில் தனித்தும் மகாராஷ்டிராவில் சிவசேனா கூட்டுடனும் ஆட்சியிலிருப்பதும் இந்து வெறி பரிவாரங்களுக்குப் புதுத்தெம்பு கொடுத்துள்ளன. உ.பி.யில் தனது குடுமிப்பிடியில் இருக்கும் மாயாவதி ஆட்சி கிடைத்திருப்பது இவர்களுக்கு இன்னொரு வரப்பிரசாதம். இராம ஜென்ம பூமி இயக்கம் மற்றும் பாபர் மசூதி இடிப்பு நிகழ்ச்சியில் கிடைத்த சாதக-பாதக அம்சங்களைக் கணக்கிட்டு - அனுபவங்களிலிருந்து படிப்பினை பெற்று, புது உத்வேகத்தோடு அடுத்த இலக்கை நோக்கி முன்னேறுகிறார்கள். உ.பி. நிலைமைக்கேற்ப மதுரா - காசி இயக்கத்தை எடுப்பது போல் அந்தந்த மாநில நிலைமைகள் - தேவைகளுக்கு ஏற்ப வேறு பிரச்சினைகளைக் கையிலெடுப்பதையும் பார்க்கலாம்.

**இந்து மதவெறி எதிர்ப்பிலிருக்கும் கட்சிகளின் பிழைப்புவாத சந்தர்ப்பவாத தன்மைகளைப் பயன்படுத்தி மாயாவதி-கன்சிராம் போன்றோரையும் குனிய வைத்து முதுகிலேறி சவாரி செய்கிறது, ஆர்.எஸ்.எஸ். கும்பல்**

சுதேசி இயக்கம், அந்நிய எதிர்ப்பு, மக்கள் பிரச்சினைகள், என்றான் தடை என்றெல்லாம் நாடகமாடிக் கொண்டிருக்கிற அதே சமயம் காஷ்மீர் பிரச்சினை, வங்காளதேச முஸ்லீம் மக்களை வெளியேற்றுவது, பசுவதை தடுப்புச் சட்டம், ஒரே சிவில் சட்டம், பொது இடத்தில் தொழுகை நடத்துவதற்கு எதிர்ப்பு, விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்கள் போன்றவைகள் மூலம் இந்து மதவெறியை - விஷத்தைக் கக்குவதைக் கைவிட்டு விடவில்லை. அரசு, ஆட்சி பலம் கிடைக்க, கிடைக்க இந்த மதவெறி பிரச்சாரத்தையும், நடவடிக்கைகளையும் அதிகரித்துக் கொண்டு வருகிறார்கள். மத்தியில் ஆட்சியைப் பிடிப்பது இந்து ராஷ்டிர கனவை நிறைவேற்றுவது வரை ஆர்.எஸ்.எஸ். கும்பல் ஓயப்போவதில்லை.

இன்னொரு இந்து மதவெறி கட்சியான காங்கிரசின் பக்கத் துணையுடன் மட்டுமல்ல இந்து மதவெறி எதிர்ப்பிலிருக்கும் கட்சிகளின் பிழைப்புவாத சந்தர்ப்பவாத தன்மைகளைப் பயன்படுத்தி மாயாவதி - கன்சிராம் போன்று எதிரணியினரையும் குனிய வைத்து முதுகிலேறி சவாரி செய்கிறது, ஆர்.எஸ்.எஸ். கும்பல். காசி, மதுரா மசூதிகளையும் இடிக்க அடித்தளம் போடும் இந்து வெறியர்களுக்கு, "பா.ஜ.க முன்பு போல் இல்லை; தனது நிலையை மாற்றிக் கொண்டு விட்டது", "பா.ஜ.க. விற்கும், வி.இ.ப. விற்கும் தொடர்பில்லை" என்றெல்லாம் வெட்கங்கெட்டு வக்காலத்து வாங்கிக் கொண்டு அரசு எந்திரத்தின் மூலம் உதவி செய்து வளர்வதற்குச் சாமரம் வீசிக் கொண்டிருக்கிறார், மாயாவதி. இப்படி பதவிக்காகவும், ஆட்சிக்காகவும் இந்து வெறியர்களுக்குத் துணைபோவதற்கான அடிப்படை ஜனதாதளம், சி.பி.எம். முதலான அனைத்து ஓட்டுக் கட்சிகளிடமும் உள்ளது. இது இந்துவெறியர்களுக்கு கிடைத்துள்ள புதியவகை பலம்.

இந்து மதவெறிக் கும்பலை எதிர்ப்பதும், அக்கும்பலுக்கு துணைபோகிற பிழைப்புவாதிகளை - சந்தர்ப்பவாதிகளைத் தோலுரித்து எதிர்ப்பதும் இணைத்து ஒரே நேரத்தில் செய்ய வேண்டியுள்ளது.

● ராசு

www.padippakam.com

# அரசியல் ரவுடிகளின் ஆதிக்கம்

## முதலாளித்துவ நாடாளுமன்ற அரசியலின் இழிந்த இறுதி வடிவம்தான் பொறுக்கி கிரிமினல் அரசியல்

தமிழகத்தில் புதிதாக ஒரு ஒட்டுண்ணிக் கும்பல் — ரவுடிகள், கிரிமினல்கள், சமூக விரோதிகள், திடீர் பணக்காரர்கள், ஊழல் அதிகாரிகள், போலீசு ஆகியோரைக் கொண்டு உருவாகியுள்ளது. இந்த ஒட்டுண்ணிக் கும்பல்கள்தான் இன்று தமிழகத்தையே ஆட்சி செய்கின்றன. இன்னாரென்று தெரியாத நபர்களும், நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு கள்ளச் சாராய வியாபாரியாகவும் சாதாரண பேட்டை ரவுடியாகவும் இருந்தவர்கள் இன்று பெரும் கோடீசுவரர்களாகக் காரில் பவனி வருகின்றனர். நகரங்களில் பல மாடிக் கட்டிடங்களைக் கட்டுகின்றனர்; புறநகர்களில் பண்ணைகள் அமைக்கின்றனர்; ஓட்டுக் கட்சி அரசியல் பிரமுகர்களாகவும் மாறி விடுகின்றனர். இத்தகைய திடீர் பணக்கார அரசியல் ரவுடிகளாகியுள்ள நபர்களைப் பற்றி எந்த நகரத்தில் போய்க் கேட்டாலும் மக்கள் கதைகதையாகக் கூறுவார்கள்.

திடீர் பணம், ரவுடித்தனம், அரசியல் செல்வாக்கு ஆகியவை இணைந்து உருவான இந்த திடீர் பணக்கார அரசியல் ரவுடிகள் தங்களது கட்டுப்பாட்டில் ஒரு அடியாள் படையைத் தயாராக வைத்துள்ளனர். தங்களது எதிரிகளை ஒழித்துக் கட்ட எத்தகைய நடவடிக்கையில் ஈடுபடவும் இவர்கள் ஒருபோதும் தயங்குவதில்லை. பிராந்திக்கடை ஏலம், உட்கட்சித் தேர்தல், அரசாங்க ஒப்பந்தங்கள் முதலான விவகாரங்களில் தங்களை எதிர்த்துப் போட்டியிடுபவர்களை ஒழிக்க இந்த அடியாள் படையை ஏவுகின்றனர்; தெருவிலேயே குண்டு வீசித் தாக்கிக் கொள்கின்றனர்; நீதி மன்றத்திலேயே புகுந்து வெட்டுகின்றனர்; இன்னாரின் ஆள் என்று கூறிக் கொண்டு வியாபாரிகளிடம் மிரட்டிப் பணம் பறிக்கின்றனர். குறுநில மன்னர்கள் போல் தத்தம் பகுதிகளில் தனி அரசாங்கமே நடத்துகின்றனர். தமது கட்டைப் பஞ்சாயத்துக்குப் பணிய மறுப்பவர்களை, பார்ப்பவர்கள் அஞ்சி நடுங்கும் வகையில் கொடூரமாகத் தாக்குகின்றனர். மக்களிடம் பயபீதியை உருவாக்கி, அதன் மூலம் தங்கள் விவகாரம் பற்றி யாரும் வாய் திறக்கக்கூட இயலாமல் செய்கின்றனர்.

நகர்ப்புற குடிசைப் பகுதிகளையும், புறம்போக்கு நிலங்களையும் கைப்பற்றி ரியல் எஸ்டேட் வியாபாரம் செய்வது, கிராமப்புறங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை வளைத்துப் போட்டு இறால் பண்ணை, பழப்பண்ணை, தேக்குமரத் தோட்டங்கள் உருவாக்குவது, காடுகளை ஆக்கிரமித்து மரங்களை வெட்டிக் கடத்துவது, மலைகளை விழுங்கி கிரானைட் தொழிற்சாலை தொடங்குவது, ஆற்று மணலை லாரி லாரியாக அள்ளி விற்பது, பைனான்ஸ் கம்பெனி என்ற பெயரில் கந்து வட்டித் தொழில், கேபிள் டி.வி., பிராந்திக் கடை, சுயநிதிக் கல்லூரி, சினிமா கொட்டகை, லாரி-பஸ் கம்பெனிகள், சூதாட்ட விடுதிகள், கடத்தல், கூலிக்குக் கொலை செய்தல், கட்டாய மாமூல் - முதலானவை இந்தத் திடீர் பணக்கார ரவுடிகளின் தொழில்கள்.

தங்களது கிரிமினல் நடவடிக்கைகளை இவர்கள் கேவலமாகக் கருதுவதில்லை; மறைக்க முயற்சிப்பதும் இல்லை. மாறாக, அவற்றையே தகுதிகளாகக் கொண்டு அரசியல் கட்சிகளின் வட்டச் செயலர், எம்.எல்.ஏ., அமைச்சர் பதவிகளைப் பெற்று சமூக அந்தஸ்துக்கு வருகின்றனர். ஏழைகளுக்கு அன்னதானம் - சிறு உதவிகள் செய்வது, கோவில் திருவிழாக்களை முன்னின்று நடத்துவது, கேளிக்கை - விளையாட்டுப் போட்டிகள் நடத்துவது முதலானவற்றின் மூலம் இவர்கள் சமூக அங்கீகாரமும் தேடிக் கொள்கின்றனர். மாவீரர், தளபதி, வள்ளல், மக்கள் தொண்டன், எழுச்சி நாயகன், அண்ணன், சமூகக் காவலன், புரட்சித் தலைவன் என்றெல்லாம் இவர்கள் தங்களைப் பிரபலப்படுத்திக் கொள்கின்றனர். உழைக்காமல் இலட்சக்கணக்கில் பணம் சம்பாதிப்பதற்கும், சொகுசாக பந்தாவாக வாழ்க்கையை அனுபவிப்பதற்கும் எந்தத் தொழிலும் செய்யலாம்; எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்பதற்கு இவர்கள் இலக்கணமாக இருக்கிறார்கள்.

> திடீர் பணக்கார அரசியல் ரவுடிக் கும்பல்களுக்கு நகர்ப்புற உதிரித் தொழிலாளர்களும், கணிசமான கிராமப்புற பாமர மக்களும், வேலையில்லா இளைஞர்களும் சமூக அடிப்படையாக அமைகிறார்கள்

இந்த ஒட்டுண்ணிக் கும்பலின் ஆதிக்கத்தைப் பற்றி சொல்லும் போது இன்றைய அரசியலின் இழி நிலை கண்டு வெறுமனே வெறுப்பு - விரக்தி, பொறாமை - ஆத்திரத்திலே சொல்லவில்லை. முதலாளித்துவ நாடாளுமன்ற அரசியலின் இழிந்த இறுதி வடிவம் என்கிற அரசியல் வரையறுப்போடுதான் சொல்கிறோம். இத்திடீர் பணக்கார ஒட்டுண்ணிக் கும்பலுக்கென்று ஒரு சமூக அடிப்படை, ஒரு சித்தாந்த அடிப்படை,' ஒரு அமைப்பு அடிப்படை உண்டு. இன்று தமிழக அரசியலில் முழுவளர்ச்சியடைந்த வடிவில் இக்கும்பல் ஆளுமை செலுத்துகிறது. நாடு முழுவதும் ஒவ்வொரு மாநிலத்திலும் அதன் சிறப்புத் தன்மைக்கேற்ற பின்னணியுடன் இக்கும்பல்கள் அரசியலில் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன.

இத்திடீர் பணக்கார அரசியல் ரவுடிக் கும்பல்களுக்கு நகர்ப்புற உதிரித் தொழிலாளர்களும், கணிசமான கிராமப் புற பாமர மக்களும், வேலையில்லா இளைஞர்களும் சமூக அடிப்படையாக அமைகிறார்கள். நாடு மறுகாலனியாக மாறிவருவதன் விளைவாக, வருடத்தில் பல நாட்கள் வேலை வாய்ப்பின்றி, பட்டினி கிடந்து தவிக்கும் கூலி - ஏழை விவசாயிகளோடு ஓட்டாண்டிகளாகி வரும் நடுத்தர விவசாயிகளும் சேர்கிறார்கள். அரைகுறை கல்வி பயின்ற இளைஞர்கள், படித்தும் வேலை வாய்ப்பின்றி, சீரழிந்த கலாச்சார பாதிப்புக்குள்ளான இளைஞர்கள் மூலமாக இத்திடீர் பணக்காரர்களைப் பற்றிய பிரமிப்பான செய்தியும் ஆதரவும் பாமர மக்களை ஈர்க்கிறது. திடீர் பணக்காரர்களின் அன்னதானம் - அன்பளிப்பு முதலான கவர்ச்சிவாத நடவடிக்கைகளில் கணிசமான பாமர மக்கள் எளிதில் மயங்கி விழுகிறார்கள். நகர்ப்புறங்களில் கள்ளச் சாராயம், சூதாட்டம், விபச்சாரம் போன்ற சமூக விரோத சீரழிவுகள் பெரும்பாலான உதிரித் தொழிலாளர்களைக் காவு கொள்கின்றன. நிரந்தர வேலையும் வருமானமும் இல்லாத இவர்களை திடீர் பணக்கார ரவுடி அரசியல் எளிதில் ஈர்த்துக் கொள்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

ஒழுக்கக் கேட்டையே ஒழுக்க நெறியாகக் கொண்ட பிழைப்புவாதமே திடீர் பணக்கார அரசியல் ரவுடிகளின் சித்தாந்த அடிப்படை. எப்படியும் வாழலாம், எப்படியும் சம்பாதிக்கலாம். சொகுசாக வாழ்வதற்காக எதையும் செய்யலாம் என்பதே இவர்களின் கொள்கை. நாடும், மக்களும் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை; எத்தகைய பாசிச, வக்கிர ஒடுக்குமுறை நீடித்தாலும் கவலையில்லை என்பதே இவர்களின் கோட்பாடு. ''நியாயமாவது, நேர்மையாவது? உன்னால் முடிந்தால் பார்த்துக் கொள்!'' என்கிற தோரணையில் எல்லா தார்மீக நெறிகளையும் காலில் போட்டு மிதிப்பது, 'இலவச - அன்பளிப்புகள்' மூலம் கணிசமான பாமர மக்களைத் தம்பின்னே திரட்டிக் கொண்டு, தமது புதியவகை நியாயத்துக்கு அங்கீகாரம் பெறுவது என்பதே இவர்களின் நடைமுறையாக உள்ளது. இந்தக் கும்பலுக்கு நாட்டுப்பற்றோ, மொழிப் பற்றோ, இனப்பற்றோ எள்ளளவும் கிடையாது. தாய்நாட்டை எந்த ஏகாதிபத்திய வல்லரசுக்கும் கூறு போட்டு விற்கவும் இவர்கள் தயங்க மாட்டார்கள். அதற்குத் தடையாக மக்களோ, சட்டமோ, நீதிமன்றமோ எது வந்தாலும் அவற்றை மீற இவர்கள் ஒருபோதும் தயங்கவும் மாட்டார்கள்.

பிழைப்புவாத அரசியல் அமைப்புகளே இத்திடீர் பணக்கார அரசியல் ரவுடிகளின் அமைப்பு அடிப்படையாக உள்ளன. விவசாயம், வியாபாரம், ஆலை உற்பத்தி போன்று சம்பாதிப்பதற்கான ஒரு தொழில் என்ற முறையில் இன்று பிழைப்புவாத அரசியல் வேர்விட்டுப் பரவியுள்ளது. தலைவர்கள் மட்டுமல்ல, நகரம், வட்டங்கள் - கிராமங்களுக்குப் பொறுப்பாக உள்ள கட்சி அணிகள் — மேலிருந்து கீழ்மட்டம் வரை உள்ள பிழைப்புவாதிகள் — அரசியல் தரகு வேலையை ஒரு தொழிலாக, அதற்கேயுரிய விதிமுறைகளுடன் செய்து வருகிறார்கள். தேர்தல் காலங்களில் பிரச்சார வேலைகள், ஆள் பிடிக்கும் வேலைகள், ஓட்டுக்குப் பேரங்கள் எனக் கட்சி நிதியையே சுருட்டிக் கொள்வது, மற்ற காலங்களில் இலவசத் திட்டங்கள், வெள்ளம் - வறட்சி நிவாரண திட்டங்களின் நிதியை அதிகாரிகளோடு சேர்ந்து கொள்ளையடிப்பது என்பதை உரிமையோடு செய்கிறார்கள். கட்சித் தலைவர்களின் எடுபிடிகளாகவும், அரசியல் தூதர்களாகவும் இருந்த பிழைப்புவாதிகள், கிராமப் பஞ்சாயத்து, நகராட்சிகளில் நியமனம் பெறுவது என்று தொடங்கி, எம்.எல்.ஏ., எம்.பி., மந்திரிகள் அளவுக்கு உயர்ந்து விட்டார்கள். பாசிச எம்.ஜி.ஆர். ஆட்சியில் கட்சிக்காக பாடுபடும் ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு ''ஏற்பாடு'' செய்து தரப்பட்டு, இன்று அது அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் பொது விதியாக மாறி விட்டது. இத்தகைய பிழைப்புவாத அரசியல் கட்சிகள் மட்டுமின்றி, பிழைப்புவாத சாதிய சங்கங்கள், ரசிகர் மன்றங்கள் போன்றவையும் திடீர் பணக்கார அரசியல் ரவுடிகள் எளிதில் செல்வாக்கு பெற வாய்ப்பாக உள்ளன. இப்பிழைப்புவாத அரசியல், சாதிய அமைப்புகளைக் கொண்டு இவர்கள் சமூக அந்தஸ்து பெற்று குறுகிய காலத்திலேயே தலைவர்களாகவும், தளபதிகளாகவும் மாறி விடுகிறார்கள். சென்னையில் கொல்லப்பட்ட ம.தி.மு.க. பிரமுகரான ராயபுரம் ஏழுமலையும், மந்திரி மதுசூதனனும் இதற்கு எடுப்பான சான்றுகள்.




பேட்டை ரவுடிகள், சாராய வியாபாரிகள், பிழைப்புவாதக் கட்சித் தலைவர்கள், சாதி சங்கத் தலைவர்கள் என பல்வேறு பின்னணியிலிருந்து உருவாகியுள்ள இந்தத் திடீர் பணக்கார அரசியல் ரௌடிகள், விதிவிலக்கின்றி எல்லா ஓட்டுக் கட்சிகளிலும் செல்வாக்குமிக்க பதவிகளில் உள்ளனர். இவர்களிலே மூன்று வகையினர் உள்ளனர். நான்காண்டுகளுக்கு முன்பு சாதாரண நிலையிலிருந்து இன்று திடீரென பெரும் கோடீசுவரர்களாகிவிட்ட அ.தி.மு.க. எம்.எல்.ஏ.,க்கள், மந்திரிகள், சசிகலா கும்பல் ஆகியோர் முதல் வகையினர்.

நீண்ட காலமாக அரசியலையே தொழிலாகக் கொண்டு பிழைத்து வந்த பழைய அரசியல்வாதிகள் இரண்டாவது வகையினர். ஏற்கனவே தமக்கிருந்த கொஞ்ச நஞ்ச செல்வாக்கைக் கொண்டு எம்.பி., மந்திரி பதவிகளைப் பிடித்த இவர்கள், இப்போது தமக்கென ஒரு அடியாள் படையைத் திரட்டிக் கொண்டும், சாதிய பலத்தைக் கொண்டும் திடீர் பணக்கார அரசியல் ரௌடிகளாக வளர்ந்து விட்டனர். அ.தி.மு.க. அமைச்சர் எஸ்.டி.எஸ்., காங்கிரசு எம்.பி. அடைக்கலராஜ், வாழப்பாடி ராமமூர்த்தி, தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர்களாக காட்டிக் கொள்ளும் ஜான் பாண்டியன், மூர்த்தி போன்றோர் இத்தகைய் பிரிவினர்.

கட்சிக்காக பாடுபட்ட அனுபவமோ, அரசியல் பலமோ இல்லாமல் காங்கிரசு - திராவிடக் கட்சித் தலைவர்களின் வாரிசு என்கிற செல்வாக்கினால் அரசியலுக்கு வந்தவர்கள் மூன்றாவது பிரிவினர். திராவிட பாரம்பரியத்தின் வாரிசு - இளைய தலைமுறை என்று பெருமையாகக் கூறிக் கொண்டு கட்சிப் பதவிகளையும், எம்.எல்.ஏ., எம்.பி., பதவிகளையும் கைப்பற்றிக் கொண்ட இவர்கள் படிப்படியாக திடீர் பணக்கார அரசியல் ரௌடிகளாக வளர்ந்துவிட்டனர். தி.மு.க.வின் மு.க. ஸ்டாலின், பரிதி இளம்வழுதி, டி.ஆர். பாலு போன்றோர் இந்தப் பிரிவினர்.

நாட்டை வல்லரசுகளுக்கு மீண்டும் காலனியாக்குகின்ற காங்கிரசு அரசின் தனியார்மயக் கொள்கையின் கீழ் காடுகள், மலைகள், சுரங்கங்கள் ஆகியவற்றை அந்நிய நிறுவனங்களுக்கு விலை பேசுவதற்கும், இறால் பண்ணைகள் மற்றும் ஆபத்தான இரசாயன ஆலைகள் அமைப்பதற்கும் இந்த திடீர் பணக்கார அரசியல் ரவுடிகள், பன்னாட்டு நிறுவனங்களின் அடியாள் படையாகவும், துணை ஒப்பந்தக்காரர்களாகவும் செயல்படுகின்றனர். இத்தகைய திட்டங்களை எதிர்த்துப் போராடும் மக்களை நசுக்க தங்களது அடியாள் படை மற்றும் போலீசுடன் இவர்கள்தான் முன்னிலையில் வந்து நிற்கின்றனர்.

பாசிச ஜெயா ஆட்சியில் தமிழகமே இந்தத் திடீர் பணக்கார ரவுடிகளின் சாம்ராச்சியமாக மாறி விட்டது. ஜெயா ஆட்



படிப்பகம்

www.padippakam.com

சியை விரட்டுவதில் எதிர்க்கட்சிகள் ஒரு வேளை வெற்றி பெற்றாலும், இந்த திடீர் பணக்கார ரவுடிகளை அரசியலிலிருந்து விரட்டுவதில் ஒருபோதும் வெற்றி பெறவே முடியாது. ஏனென்றால் ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு கட்சியும், தமது கட்சிக்காரனுக்கு சம்பாதிக்க வழி செய்து கொடுக்க வேண்டும் என்பது ஓட்டுக் கட்சி அரசியலின் எழுதப்படாத விதியாகிவிட்டது. வரவிருக்கும் தேர்தலில் அனைத்துக் கட்சிகளின் சார்பில் போட்டியிடப் போவதும், வெற்றி பெறப் போவதும் இந்த அரசியல் ரவுடிகள்தான் என்பது நிச்சயமாகி விட்டது.

அரசியல் கிரிமினல்மயமாக மாறி விட்டதை இனியும் மறைக்க முடியாத நிலையில் ''வோரா கமிட்டி'' போன்ற ஆய்வுக் குழுக்களை நியமித்து அதன் மூலம் அரசியலைத் தூய்மைப்படுத்தப் போவதாக ஆளும் வர்க்கம் நாடகமாடுகிறது. ''உலகிலேயே நாடாளுமன்ற ஆட்சிமுறைதான் சிறந்தது; சில கிரிமினல்களும் பிழைப்புவாதிகளும் அரசியலில் புகுந்து கெடுத்து விட்டார்கள்; சரியான நபர்களைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் இதனைச் சரிசெய்து விடலாம்'' என்று முதலாளித்துவப் பத்திரிகைகள் பிரமையூட்டுகின்றன. ஆனால், இந்தத் திடீர் பணக்கார அரசியல் ரவுடிகள், நாடாளுமன்ற ஜனநாயகம் பெற்றெடுத்த கள்ளக் குழந்தைகள் தான்! எனவே, தேர்தல் பாதையின் மூலம் இவர்களை ஒழிக்க முடியாது. சட்டங்களாலோ, நீதிமன்றங்களாலோ இவர்களைக் கட்டுப்படுத்தவும் முடியாது. காங்கிரசும், இந்துவெறியர்களும் திணிக்க முயலும் பாசிச ஆட்சிக்கு அடித்தளமாக நிற்கப் போகும் குண்டர் படைகள் இவ்ர்கள்தான். இவர்களை எதிர்த்து முறியடிக்காமல், மக்கள் தங்களது சாதாரண கோரிக்கைகளுக்காகக் கூட இனி போராட முடியாது. அன்றாட வாழ்க்கையை நிம்மதியாக நடத்தவும் இயலாது.

கேவலம் சொகுசுக்காக, சுயமரியாதையை விற்றுவிட்ட ஒரு ஓட்டுண்ணி ரவுடிக் கும்பல் நம்மை அடக்கி ஆள்வதற்கு அனுமதிக்கப் போகிறோமா? அல்லது அஞ்சியது போதும் என்று புரட்சிகர அமைப்புகளில் அணிதிரண்டு இந்தத் திடீர் பணக்கார அரசியல் ரவுடிகளை முறியடிக்கப் போகிறோமா?

திடீர் பணக்கார அரசியல் ரவுடிகள், பண்ணாட்டு நிறுவனங்களின் அடியாள் படையாகவும் செயல்படுகிறார்கள்

# ரத்தம் குடித்தவன் ரத்த பலியானான்

**பியாந்த் சிங்கின் துரோகத்திற்கும் கிரிமினல் குற்றங்களுக்கும் வழங்கப்பட்ட தண்டனைதான் இச்சாவு.**

பாசிஸ்டுகளின் முடிவு எப்படி கேவலமானதாக இருக்கும் என்பதற்கு மற்றொரு உதாரணம் பஞ்சாப் மாநில முதல்வர் பியாந்த் சிங்கின் மரணம். கடந்த ஆகஸ்ட் மாதம் 31-ந் தேதியன்று சண்டிகரிலுள்ள பஞ்சாப் மாநில தலைமைச் செயலகத்தில் இருந்து வெளியே கிளம்பிய அவர், தனது காரில் ஏறி அமரும் நேரத்தில் குண்டு வெடித்து எளிதில் அடையாளம் காண முடியாதவாறு சிதைந்து சின்னாபின்னமாகிப் போனார். எப்பொழுதும் தனது கையில் அணிந்திருக்கும் இரும்பு வளையத்தைக் கொண்டுதான், அவரின் சடலத்தை அடையாளம் காண முடிந்திருக்கிறது. நொறுங்கிப் போன காரிலும், தரையிலும், சுவற்றிலும் ஒட்டிக் கொண்டிருந்த சதைப் பிண்டங்களைச் சுரண்டியெடுத்து, சவப்பெட்டியினுள் போட்டு மூடி, அவரின் இறுதிச் சடங்குகளை முடித்துள்ளது ஆளும் வர்க்கம்.

பாசிச ஜெயாவினைப் போலவே, பியாந்த் சிங்கிற்கும் அதி உயர்ந்த "Z" பிரிவு பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருந்தது. அவர் வெளியே கிளம்புகிறார் எனில், ஒரே நிறத்தில் அமைந்த குண்டு துளைக்காத மூன்று கார்கள், முற்றிலும் பரிசோதிக்கப்பட்டு தயார் நிலையில் இருக்கும். ''பியாந்த் சிங் எந்தக் காரில் ஏறிச் செல்ல வேண்டும்'' என்பதை இறுதி நேரத்தில்தான் அவரின் பாதுகாப்பு உயர் அ்திகாரி முடிவு செய்வார். மேலும் யாரும் அவரை எளிதில் நெருங்கிவிட முடியாதபடி அதிரடிப் படையினரின் பாதுகாப்பு வளையமும் உண்டு. இவை எல்லாவற்றையும் மீறி நடந்துள்ள இத்தாக்குதலில் அவரோடு, எட்டு பாதுகாப்பு அதிகாரிகளையும் உள்ளிட்டு 15 பேர் இறந்து போயினர்; உயர் அதிகாரிகளையும் உள்ளிட்டு 23 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

''முதல்வரின் காரில் ஆர்.டி. எக்ஸ்.' எனும் சக்தி வாய்ந்த வெடி மருந்தை இரகசியமாக வைத்து விட்டு, தூரத்தில் இருந்து இக்குண்டினைச் சீக்கிய் தீவிரவாதிகள் வெடிக்கச் செய்துள்ளனர்'' எனப் பஞ்சாப் போலீசார் முதலில் கூறினர். தலைமைச் செயலகத்தின் அருகில் கைவிடப்பட்ட நிலையில் இருந்த வெள்ளை நிற காரும், அதனுள் கண்டெடுக்கப்பட்ட மின் கலங்களும் கவிதைச் சீட்டும், பாகிஸ்தானில் இருந்து இயங்கி வரும் சீக்கிய தீவிரவாத அமைப்பான பாப்பர் கால்ஸா பத்திரிகைகளுக்கு அனுப்பியிருந்த செய்தியும் இதற்கு ஆதாரங்களாக போலீசார் தரப்பில் கூறப்பட்டன.

பின்னர் இதனை மறுத்து விட்டு, ''மனித வெடிகுண்டின் மூலம் பியாந்த் சிங் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக'' பஞ்சாப் போலீசும் மத்திய புலனாய்வுத் துறையும் கூறத் தொடங்கியுள்ளன. வெளி உலகுக்குத் தெரியாவண்ணம் போலீசாரால் பாதுகாக்கப்பட்டு வரும் குண்டு வெடிப்பில் சிதைந்து போன 16-வது உடலை, தடய அறிவியல் துறையினர் ப்ரிசோதனை செய்து இம்முடிவுக்கு வந்திருப்பதாகக் கூறப்படுகிறது. திலாவர் சிங் என்ற பில்லா என்பவன் தான் இம்மனித வெடிகுண்டென்றும், இவனுக்கு உதவியதற்காக குர்மித்சிங் பஞ்சாப் போலீசு துறையில் ஓட்டுநராக வேலை பார்த்து வந்த லக்விந்தர் சிங் என்ற இருவரும் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

பியாந்த் சிங் எப்படி அழித்தொழிக்கப்பட்டார் என்பது பற்றி இன்னும் சந்தேகங்களும் குழப்பங்களும் நிலவுகின்றன. ஆனாலும் அவர் எப்படி இந்த அரசியல் அமைப்பு வழங்கியிருக்கும் அற்ப சொற்ப ஜனநாயக உரிமைகளையும் காலில் போட்டு மிதித்து பாசிஸ்டாக வலம் வந்தார் என்பதற்கும், அரசு பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டு சீக்கிய தீவிரவாதிகளை மட்டுமல்லாது அப்பாவி மக்களையும் நரவேட்டையாடினார் என்பதற்கும், கொஞ்சமும் இரக்கமின்றி கர்ப்பிணிப் பெண்களையும் குழந்தைகளையும் கூட கொட்டடியில் தள்ளி பஞ்சாப் போலீசு சித்திரவதை செய்துள்ளது என்பதற்கும் அழிக்க முடியாத ஏராளமான சான்றுகள் ஆதாரங்களாக உள்ளன.

பியாந்த் சிங் பெருவாரியான மக்களின் வாக்குகளைப் பெற்று, முதல்வர் பதவியை அடையவில்லை. 92-ம் ஆண்டு நடந்த சட்டசபை தேர்தலை அகாலிகளும், சீக்கிய தீவிரவாதிகளும் புறக்கணிக்குமாறு மக்களுக்கு அறைகூவல் விடவே, வெறும் 20 சதவீத வாக்குகளே தேர்தலில் பதிவாகின. வெறும் பத்து சதவீத வாக்குகளைப் பெற்றுத்தான் காங்கி



படிப்பகம்

www.padippakam.com

ரசு ஆட்சியமைத்தது. பியாந்த் சிங் பதவியில் அமர்ந்த மறுநிமிடமே கையளவேயான 4,000 தீவிரவாதிகளை ஒடுக்குவதற்காக இராணுவம், துணை இராணுவப் படைகள், சிறப்புப் பயிற்சி பெற்ற போலீசார் என இரண்டு இலட்சம் துருப்புகள் பஞ்சாப் மாநிலமெங்கும் இறக்கி விடப்பட்டன.

"நள்ளிரவு நடவடிக்கை" என்ற பெயரில் கிராமங்கள் சுற்றி வளைக்கப்பட்டன. தீவிரவாதிகள் மட்டுமல்லாது, அவர்களுக்கு ஆதரவானவர்கள், புகலிடம் தந்தோர் என அப்பாவிகள் பலரும் 'மோதல்' என்ற பெயரில் சுட்டுக் கொல்லப்பட்டனர். தீவிரவாதிகளைப் பிடித்து நீதிமன்றத்தில் நிறுத்துவது என்பதற்குப் பதிலாக, "பிடித்து சுட்டுக் கொல்" என்பது போலீசின் தாரக மந்திரமானது. "பேச்சு வார்த்தைகளின் மூலம் தீவிரவாதத்தை ஒழிக்க முடியாது" என பியாந்த் சிங் போலீசின் பாதகச் செயல்களுக்கு நியாயம் கற்பித்தார். தீவிரவாதிகளின் மத்தியில் துரோகிகளை உருவாக்கவும், கிரிமினல்களைக் கொண்ட இரகசிய கொலைப் படைகளைக் கட்டவும் எவ்விதக் கணக்குமின்றி பணம் தண்ணீராகச் செலவு செய்யப்பட்டது. இதனால் அப்பாவிகளைப் பிடித்து தீவிரவாதிகள் என முத்திரை குத்தி சுட்டுக் கொன்று இலட்சக்கணக்கில் பரிசுப் பணம் பெறுவது சர்வ சாதாரணமாகியது. 89-ஆம் ஆண்டு தொடங்கி தீவிரவாதம் உச்சத்தில் இருந்த 92-ம் ஆண்டு முடிய, 5000 'தீவிரவாதிகள்' பியாந்த் சிங்கின் தளபதி கில் தலைமையில் கொன்றொழிக்கப்பட்டனர்.

92-ம் ஆண்டு சட்டசபை தேர்தல் முடிந்த பின், காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்ட பல பகுஜன் சமாஜ் கட்சி வேட்பாளர்களை இரகசியமாகக் கொன்றொழித்தார், பியாந்த் சிங். 93-ம் ஆண்டு நடந்த பஞ்சாயத்துத் தேர்தலில், காங்கிரசை எதிர்த்த பல வேட்பாளர்கள் போலீசாரால் கடத்தப்பட்டனர்; வேட்பு மனு தாக்கல் செய்ய முடியாதவாறு தடுக்கப்பட்டனர்; தீவிரவாதிகள் என முத்திரை குத்தப்பட்டு சிறைக்குள் தள்ளப்பட்டனர். சுதந்திர போராட்ட தியாகியான பகத்சிங்கின் உறவினரான ஹர்பஜன் சிங்கும் போலீசின் இத்தாக்குதலுக்குத் தப்பவில்லை. "அரசின் இடத்தை போலீசு எடுத்துக் கொண்டு விட்டது" என அனைத்து எதிர்க்கட்சிகளும் பியாந்த் சிங்கை விமர்சிக்குமளவு பஞ்சாபை போலீசு இராஜ்ஜியமாக மாற்றியமைத்தார், அவர்.

இப்படி கட்டவிழ்த்து விட்ட நிலையில் பஞ்சாப் போலீசு நடத்தியிருக்கும் மனித உரிமை மீறல்கள் எண்ணிலடங்கா. சங்ரூர் மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு அப்பாவி தாய்மார்களின் நெற்றியில் "நான் திருடி" எனப் பச்சை குத்தினர் போலீசார்; தலைமறைவாக இருந்த கணவரைப் பிடித்துத் தரக்கோரி ராஜிந்தர் கவுர் என்ற இளம் பெண், கர்ப்பிணியென்றும் பாராமல் ஆற்று நீரில் மூழ்க வைத்து சித்திரவதை செய்யப்பட்டார்; போலீசாரின் அத்துமீறல்களை அம்பலப்படுத்திய "ஆஜ் தி அவாஸ்" தினசரியின் ஆசிரியர், உரிமையாளர், அச்சகர் மூவரும் "தடா"வில் சிறையில் தள்ளப்பட்டனர். போலீசாரை எதிர்த்து வழக்காடிய ஜக்விந்தர் சிங், மான்சியா, குல்வந்த் சிங் உள்ளிட்ட பத்து வழக்கறிஞர்களின் கதி என்னவானது என்று போலீசாரைத் தவிர்த்து யாருக்கும் தெரியாது. எல்லைப்புற மாவட்டங்களில் உள்ள அப்பாவி விவசாயிகளை, "தீவிரவாதிகளுடன் தொடர்பு வைத்துள்ளாய்" என மிரட்டியே இலட்சக்கணக்கில் பணம் பெற்றுள்ளது போலீசு. போலீசின் அத்துமீறல்களை எதிர்த்த, "ஹேபியஸ் கார்பஸ்" உள்ளிட்ட 400 வழக்குகள் இன்று நீதிமன்றங்களில் விசாரணைக்காகக் காத்திருக்கின்றன.



சக பாசிஸ்டின் சாவை விசாரிக்கும் போலீஸ் பயங்கரவாதி கில்

போலீசின் சித்திரவதைக்குப் பின் மருத்துமனைக்குக் கொண்டு வரப்பட்ட சுர்ஜித் சிங் என்ற இளைஞன் உயிரோடு இருக்கிறான் எனத் தெரிந்ததும், அவ்விளைஞனைச் சுட்டுக் கொன்று பிரேத பரிசோனைக்கு மருத்துவர்களிடம் ஒப்படைத்துள்ளார் சீதாராம் என்ற போலீசு ஆய்வாளர். இப்படுபாதகச் செயல் உலகெங்கும் கடும் கண்டனத்திற்கு உள்ளானது. உ.பி.யில் தெராய் பகுதியில் பத்து சீக்கிய சுற்றுலா பயணிகளைச் சுட்டுக் கொன்ற வழக்கிலும், மேற்கு வங்கத்தில் ஒரு தம்பதியினரைச் சுட்டுக் கொன்ற வழக்கிலும் குற்றமிழைத்த போலீசாரின் மீது நடவடிக்கை எடுக்கச் சொல்லி தீர்ப்பளித்துள்ளது உச்சநீதிமன்றம். 426 சடலங்களை போலீசார் மறைமுகமாக எரித்திருப்பதை சமீபத்தில் அம்பலப்படுத்தின மனித உரிமை அமைப்புகள்.

ஆனால் இவை எதற்குமே அசைந்து கொடுக்காது, போலீசாரைக் காப்பதில்தான் மும்முரமாக இருந்தார் பியாந்த் சிங்; தனது பேரன் குர்கரத் சிங் போலீசின் துணையோடு காடியா டோரெண்ட் என்ற பிரெஞ்சு பெண்ணைக் கடத்திச் சென்று மானபங்கப்படுத்த முயன்றது அம்பலமான பொழுது, "கற்பழிப்பா நடந்து விட்டது" எனத் திருப்பி கேட்ட பண்பாளர்தான் பியாந்த் சிங். பஞ்சாபில் அனைத்துத் தரப்பு மக்களிடமிருந்தும் பியாந்த் சிங்கும் காங்கிரசும் தனிமைப்பட்டிருந்ததற்குச் சான்றாக அமைந்தது கித்தேர்பாஹா இடைத் தேர்தல். அரசு இயந்திரம் முழுவதையும் முடுக்கி விட்டும் கூட, மிகக் குறைவான வாக்கு வித்தியாசத்திலேயே காங்கிரசு வெற்றி பெற முடிந்தது.

இந்த உண்மைகளையெல்லாம் குழி தோண்டிப் புதைத்துவிட்டு, பஞ்சாபில் அமைதியை நிலைநாட்டிய தேவதூதனாக அவரைச் சித்திரிக்கின்றன ஆளும் வர்க்கமும் ஓட்டுக் கட்சிகளும். முதலாளித்துவப் பத்திரிகைகளோ தாங்களே அம்பலப்படுத்திய இந்த மனித உரிமை மீறல்களையெல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு, "நிதானமும் உறுதியும் வீரமும் கொண்ட ஆபூர்வ தலைவர்" எனப் புகழாரம் சூட்டுகின்றன. சவப்பெட்டியைக் காணத் திரண்டிருந்த கூட்டத்தைக் காட்டி, "ஏழை - எளிய மக்களின் பிரச்சனைகளைப் புரிந்து கொண்டிருந்த வித்தியாசமான தலைவர்" எனத் திரித்து எழுதுகின்றன.

ஆனால் எதிர்த்தரப்பினரைத் துப்பாக்கி முனையைக் கொண்டு அடக்கி ஒடுக்கியும், ஓட்டுப் பொறுக்க கவர்ச்சிவாத பிழைப்புவாத அரசியலில் தஞ்சம் புகுந்தும் தரகு முதலாளிகளுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் சேவை செய்த கிரிமினல் அரசியல் பேர்வழிதான் பியாந்த் சிங்; சீக்கிய மதத் தீவிரவாதத்தை சட்டம் - ஒழுங்கு பிரச்னை என முத்திரை குத்தி, அரசு பயங்கரவாதத்தின் மூலம் அதனை ஒழித்துக் கட்ட கனவு கண்ட பாசிஸ்ட்தான் பியாந்த் சிங். சொந்த இன மக்களுக்கே அவர் செய்த துரோகத்திற்கும், அவரின் கிரிமினல் குற்றங்களுக்கும் வழங்கப்பட்டுள்ள தக்க தண்டனைதான் இச்சாவு. வெறிநாயொன்று கொல்லப்படுவதைக் கண்டு நாம் இரக்கப்படாதது போல பியாந்த் சிங்கின் மரணம் குறித்தும் அனுதாபப்படத் தேவையில்லை.

● ரஹீம்



படிப்பகம்

www.padippakam.com

## கனிவளமும் ஏகாதிபத்தியங்களின் காலடியில்

நாட்டின் ஒவ்வொரு துறையையும் அந்நிய ஏகாதிபத்தியங்களுக்குத் தாரைவார்த்து வரும் ராவ் அரசு, இப்போது இந்தியாவின் விலைமதிப்பற்ற இரும்புத்தாது சுரங்கத்தையும் ஜப்பானிய கூட்டு நிறுவனத்துக்கு அடிமாட்டு விலைக்குக் கையளித்துவிட்டது. மத்தியப் பிரதேசத்தின் பஸ்தார் மாவட்டத்திலுள்ள பைலதில்லா சுரங்கத்தின் இரும்புத்தாது உலகில் உயர்தரமானதாக மதிப்பிடப்படுகிறது. ஆண்டுக்கு 88 கோடி ரூபாய்க்கும் மேலாக வருவாயை ஈட்டித் தரக்கூடிய இலாபகரமான சுரங்கங்களில் இதுவும் ஒன்று. அரசுத்துறை நிறுவனமான இச்சுரங்கத்தைத் தனியார் கூட்டுடன் நவீனப்படுத்துவதாகக் கூறிக் கொண்டு, நிப்பான் டென்ரோ இஸ்பட் (NDIL) என்ற ஜப்பானிய தரகு நிறுவனத்துக்கு 16.25 கோடி ரூபாய்க்கு ராவ் கும்பல் விலை பேசிவிட்டது.

தேசிய தாதுப்பொருள் வளர்ச்சிக் கழகத்தின் கீழுள்ள இச்சுரங்கத்தை நவீனப்படுத்தத் தீர்மானித்த போது, அதன் 40% பங்குகளை மட்டும் தனியாருக்கு விற்பதென முடிவு செய்யப்பட்டது. ஆனால் முடிவுகளை மீறி "இஸ்பட்" நிறுவனத்துக்கு 89% பங்குகள் விற்கப்பட்டுள்ளன. மீதி 11% பங்குகளைக் கொண்டுள்ள அரசால் எந்தவொரு கட்டுப்பாட்டையும் அந்நிறுவனத்தின் மீது விதிக்க முடியாது. ஆனாலும் அரசு கண்காணிப்புடன் கூடிய கூட்டுப் பங்கு சுரங்கமாக ராவ் கும்பல் பித்தலாட்டம் செய்து வருகிறது. தாதுப்பொருள் சுரங்க சட்டவிதிகளின் படி, மாநில அரசின் ஒப்புதலுடன்தான் மத்திய அரசு ஒப்பந்தங்களைப் போட வேண்டும். ஆனால் பைலதில்லா சுரங்கத்தை அந்நிய நிறுவனத்துக்குத் தாரை வார்த்த விவகாரத்தில், ராவ் கும்பல் மாநில அரசை கலந்தாலோசிக்காமல் தன்னிச்சையாகவே முடிவு செய்துள்ளது.



தனியார் மயமாக்கலை எதிர்த்து பைலதில்லா சுரங்கத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

மேலும், என்ரான் விவகாரத்தைப் போலவே இச்சுரங்கத்தின் பங்குகளை விற்றபோது உலக அளவில் "டெண்டர்கள்" கோரப்படாமல், ஒரேநாளில் "இஸ்பட்" நிறுவனத்துக்கு மட்டுமே அடிமாட்டு விலைக்கு விற்கப்பட்டுள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக, மொத்த விலையில் பாதியளவு கூட இல்லாத 7 கோடி ரூபாய் மட்டுமே கொடுத்து "இஸ்பட்" நிறுவனம் இச்சுரங்கத்தின் மீது ஏகபோக ஆதிக்கம் செலுத்துகிறது.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் நெருங்கி விட்டதால், எதிர்க்கட்சிகள் ராவ் அரசின் கொள்கையைச் சாடி "எவ்வளவு இலஞ்சம் வாங்கினீர்கள்?" என்று நாடாளுமன்றத்தில் கூச்சல் போட்டு இந்த விவகாரத்தைச் சூடேற்றின. அரசியல் ஆதாயம் கருதித் தனியார் மயமாக்கலை எதிர்க்கும் இக்கட்சிகளுக்கு அத்தகைய கொள்கையோ, இலட்சியமோ கிடையாது. எனவேதான், பைலதில்லா சுரங்கத்தைத் தனியாருக்கு விற்றதை ரத்து செய்யக் கோருவதை விட்டு, பொதுக் கணக்கு தணிக்கை கமிட்டி (PAC) ஆய்வு செய்து அறிக்கை தர வேண்டுமென்று சமரசமாகிப் போய்விட்டன.

## 'பிளேடு' கம்பெனிகளின் புதிய மோசடி

புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாக, "கோட்டு - சூட்டு" போட்ட புதியவகை கிரிமினல் பேர்வழிகள் நாடெங்கும் பெருகி வருகிறார்கள். 80-களில் "பிளேடு கம்பெனிகள்" என்ற அடைமொழியுடன் அம்பலப்பட்ட கணக்கற்ற மோசடி நிதி நிறுவனங்கள் இப்போது, புதிய விளம்பர வித்தைகளுடன் கிளம்பியுள்ளன. ஆடு வளர்ப்பு, கோழிப் பண்ணை, பன்றி வளர்ப்புத் திட்டங்கள், தேக்கு மர வளர்ப்பு, பழப் பண்ணைகள், நெல் சாகுபடித் திட்டங்கள் என்ற பெயரில் இத்தகைய மோசடி நிறுவனங்கள் பெருகி வருகின்றன. "1000 ரூபாய் முதலீடு செய்தால் 5 ஆண்டுகளில் 20,000 ரூபாய் கிடைக்கும்; 5000 ரூபாய் முதலீடு செய்தால் 2 லட்ச ரூபாய் மதிப்புள்ள தேக்கு மரம் கிடைக்கும்; மாதந்தோறும் 10 கிலோ அரிசி உங்கள் வீடு தேடி வரும்" என்றெல்லாம் இந்நிறுவனங்கள் செய்யும் கவர்ச்சிகரமான விளம்பரங்களை நம்பி நடுத்தர வர்க்கத்தினர் தமது சேமிப்புகளை இவற்றில் முதலீடு செய்கின்றனர். மிகச் சாதாரண நிறுவனம் கூட இத்தகைய விளம்பரங்கள் வெளியிட்டு 5 கோடி ரூபாய் வரை திரட்டியுள்ளது.

உண்மையில், இத்தகைய புதிய வகை பிளேடு கம்பெனிகளின் வாக்குறுதிகளுக்கு எவ்வித உத்திரவாதமும் இல்லை. இன்னும் சொல்லப் போனால், இந்நிறுவனங்களுக்கு எங்கேயும் பண்ணைகள் கிடையாது. அண்மையில் கேரளாவின் கொச்சியில் இத்தகைய நிறுவனங்களில் முதலீடு செய்தவர்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் போலீசார் சோதனை நடத்திய போது, மோசடிகள் அம்பலமாகின. இந்நிறுவனங்கள் வழங்கும் பின் தேதியிட்ட காசோலைகள் மோசடியானவை; பல நிறுவனங்களிடம் உரிய ஆவணங்களோ, பண்ணைகளோ கிடையாது; பண்ணை உள்ள இடத்தில் புல், பூண்டுகூட முளைக்கவில்லை என்பது சோதனையில் நிரூபணமானது. இதைத் தொடர்ந்து அழகானந்தா ஆட்டுப் பண்ணைத் திட்டத்தின் அதிபர் கைது செய்யப்பட்டுள்ளார். இது தவிர 45-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் மீது விசாரணை நடந்து வருகிறது.

இருப்பினும், "சில 'கறுப்பு ஆடுகள்' இந்தத் திட்டத்தில் ஊடுருவியுள்ளன. அவற்றைக் களைந்து விட்டு எமது திட்டத்தைத் தொடருவோம்" என்று சில பெரிய நிறுவனங்கள் பசப்பி வருகின்றன. வரலாறு காணாத வங்கி - பங்கு சந்தை மோசடிக்கு ஒரு


படிப்பகம்

www.padippakam.com

அர்ஷத் மேத்தா என்றால், இன்று மோசடியையே மூலதனமாகக் கொண்ட ஓராயிரம் பிளேடு பக்கிரிகள் நாடெங்கும் உருவாகி விட்டார்கள். புதிய பொருளாதாரக் கொள்கை பெற்றெடுத்த கள்ளக் குழந்தைகளின் முகவிலாசம் எப்படியிருக்கிறது பாருங்கள்!

## காஷ்மீரில் அந்நியப் படைகள் இராணுவத்திலும் ஆதிக்கம்


இந்திய நாட்டை ஏகாதிபத்தியங்களின் மறுகாலனியாக மாற்றி வரும் ராவ் கும்பல், பொருளாதாரத் துறை மட்டுமின்றி இராணுவத்திலும் அந்நிய ஆதிக்கத்துக்கு தாராள அனுமதி அளித்து, நாட்டின் பெயரளவிலான சுயாதிபத்திய உரிமையையும் தாரை வார்க்கக் கிளம்பி விட்டது. காஷ்மீரில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ள தமது இயக்கத்தின் 21 போராளிகளை விடுவிக்கக் கோரி, ''அல்-ஃபாரான்'' குழுவின் தீவிரவாதிகள் 5 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கடந்த ஜூலை மாதத்தில் கடத்திச் சென்றனர். இப்பிணைக் கைதிகளை இந்திய அரசால் இன்று வரை விடுவிக்க முடியவில்லை. எனவே, அமெரிக்காவின் ''டெல்டா'' அதிரடிப் படை, பிரிட்டனின் சிறப்பு வான்படை, ஜெர்மனியின் எல்லை போலீசு அதிரடிப் படையான ''ஜி.எஸ்.ஜி-9'' ஆகியவற்றைக் காஷ்மீரில் குவித்துப் பிணைக் கைதிகளை மீட்க இந்திய அரசு கிளம்பியுள்ளது. ஏகாதிபத்தியங்களின் இச்சிறப்பு அதிரடிப் படைகள் இப்போது காஷ்மீரில் தேடுதல் வேட்டையை நடத்தி வருகின்றன. இந்நடவடிக்கையைப் பற்றி இந்திய அரசு, இந்திய இராணுவத்துடன் கலந்தாலோசிக்கவில்லை. அதேசமயம் அந்நிய அதிரடிப் படைகளின் ஆணைக்குக் கட்டுப்பட்டு அதற்கு உதவுமாறு ஆணையிட்டுள்ளது.

இந்திய இராணுவத்தை அவமதிக்கும் இந்நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, வடக்கு பிராந்திய இராணுவத் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் சுரிந்தர் சிங் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். ''அந்நியப் படைகளிடம் பாடம் கேட்கச் சொல்வது, இந்திய இராணுவத்தையே இழிவுபடுத்தும் செயல்; இது இந்தியாவின் சுயாதிபத்தியத்துக்கே எதிரானது'' என்று இராணுவ உயரதிகாரிகள் பலர் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள். நிலைமை விபரீதமாகி வருவதை உணர்ந்த பாதுகாப்பு அமைச்சகம், சுரிந்தர் சிங்கின் இராஜினாமாவை ஏற்க மறுத்து அவரைச் சரிகட்ட முயற்சித்து வருகிறது.

காஷ்மீரில் ஏகாதிபத்திய படைகுவிப்பு என்பது ஒரு தொடக்கம்தான். நாளை அசாம், நாகா, மிஜோ போராளிகளை ஒடுக்கவும், உள்நாட்டுக் கலவரங்களைக் கட்டுப்படுத்துவது என்ற பெயரில் ஏகாதிபத்தியப் படைகள் குவிக்கப்படுவதும் தொடரவே செய்யும். சுருக்கமாகச் சொன்னால் வெள்ளைக்காரன் காலத்து அடிமை இந்தியாவாக மாற்றும் திசையில் தான் ராவ் கும்பல் ஓடோடிச் சேவகம் செய்கிறது. காஷ்மீரில் பாக். கைக்கூலிகள் ஊடுருவியுள்ளதாகப் பெருங் கூச்சல் போடும் இந்து வெறியர்கள், இப்போது அங்கே வெளிப்படையாகவே அந்நிய ஏகாதிபத்தியப் படைகள் குவிக்கப்பட்ட பிறகும் கூட முணுமுணுப்போடு அடங்கி விட்டன. இந்து வெறியர்கள் மட்டுமல்ல; ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடகமாடும் போலிக் கம்யூனிஸ்டுகள் உள்ளிட்டு எல்லா ஓட்டுக் கட்சிகளும் வாய் மூடியே கிடக்கின்றன. இவர்களின் நாட்டுப் பற்று யோக்கியதை இவ்வளவுதான்!

## காவிரி நீர்: மீண்டும் நயவஞ்சக நாடகம்

காவிரியில் தமிழக மக்களின் நியாயமான உரிமையைக் கர்நாடக ஆட்சியாளர்கள் தொடர்ந்து மறுத்துவரும் நிலையில், கடந்த ஆகஸ்ட் மாத இறுதியில் தமிழகத்துக்கு 5 டிஎம்சி தண்ணீரைத் திறந்துவிட்டு கர்நாடக முதல்வர் தேவகௌடா அரசியல் நயவஞ்சக சதிராட்டம் ஆடியுள்ளார். தமிழக விவசாயிகளி



டம் கருணை வள்ளலாகக் காட்டிக் கொள்ள அவர் ஆடிய நாடகம், கர்நாடக அரசியல் கட்சிகளின் கண்டனத்தைத் தொடர்ந்து ஒரேநாளில் முடிந்து விட்டது.

**காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பு நகல் எரிப்புப் போராட்டம்; வட்டல் நாகராஜ் தலைமையில் கன்னட இன வெறியர்களின் கொட்டம்**

காவிரி நீர்ப் பிரச்சினையில் நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பை கர்நாடக ஆட்சியாளர்கள் என்றுமே மதித்து நடந்தது கிடையாது. இத்தீர்ப்பு கர்நாடகத்தைக் கட்டுப்படுத்தாது என்றுதான் அவர்கள் வாதிட்டு வருகிறார்கள். நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு வரும் வரையில் ஆண்டுதோறும் 205 டிஎம்சி நீரைத் தமிழகத்துக்கு கர்நாடகம் அளிக்க வேண்டும் என்பது இடைக்காலத் தீர்ப்பு. இதோடு மாதாமாதம் எவ்வளவு நீரை விடுவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பில் விளக்கப்பட்டுள்ளது. ஆயினும் கர்நாடக ஆட்சியாளர்கள் இத்தீர்ப்பை நடைமுறைப்படுத்தியதே இல்லை. நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை ஏற்பதா, கூடாதா என்பது பற்றி அரசு இன்னும் முடிவு செய்யவில்லை என்றுதான் கர்நாடக முதல்வர் தேவகௌடா பேசி வந்துள்ளார்.

இந்நிலையில், திடீரென 5 டிஎம்சி தண்ணீரை கர்நாடக அரசு திறந்து விட்டதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. இடைக்காலத் தீர்ப்பைச் செயல்படுத்த ஆணையிடக் கோரி தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளது. 28.8.95-இல் விசாரணைக்கு வந்தது. அதைச் சமாளிக்கும் நோக்கத்தோடு தான் 27.8.95-இல் அவசரமாக 5 டிஎம்சி தண்ணீரைக் கர்நாடக அரசு திறந்து விட்டுள்ளது. இதன் மூலம் நடுவர் மன்றத் தீர்ப்பை மதித்து நடப்பதுபோல் நாடகமாடுவது, ஜெயா கும்பலை தேசிய முன்னணிக்கு இழுக்க இதை ஒரு


படிப்பகம்

www.padippakam.com

வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்வது, கர்நாடக இனவெறியர்கள் தண்ணீர் திறந்து விடுவதற்கு எதிர்ப்பு தெரிவித்ததும் பழியை அவர்கள் மீது போட்டுவிட்டு நியாயவானாகக் காட்டிக் கொள்வது என்கிற நரித்தனத்துடன்தான் தேவகௌடா இந்நாடகத்தை நடத்தியுள்ளார். எதிர்பார்த்தபடியே கன்னட இனவெறியர்களும் அனைத்து ஓட்டுக் கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்து, சட்டசபையை செயல்படவிடாமல் தடுத்து சாலை மறியல், கொடும்பாவி எரிப்பு எனப் போராட்டத்தில் இறங்கியதும், இனிமேல் தமிழகத்துக்குத் தண்ணீர் கிடையாது என்று தேவகௌடா அறிவித்து விட்டார்.

ஆண்டுதோறும் ஜூலை - ஆகஸ்டு மாதங்களில் காவிரி நீர்ப் பிரச்சினையை வைத்து தமிழக - கர்நாடக ஓட்டுக் கட்சிகள் கூத்தடிப்பது வாடிக்கையாகிவிட்டது. கர்நாடகத்தில் காங்கிரசு, பாரதீய ஜனதா, போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட அனைத்து 'தேசிய'க் கட்சிகளும் அரசியல் வேறுபாடின்றி காவிரியில் தண்ணீர் திறந்து விடுவதை எதிர்க்கின்றன. இதே கட்சிகள் தமிழகத்தில் காவிரியில் தண்ணீர் கோரி சந்தர்ப்பவாத வேஷங்கட்டி ஆடுகின்றன. பாசிச ஜெயா கும்பலோ வழக்கம் போலவே மத்திய அரசு மீது பழிபோட்டு தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறது. தமிழக விவசாயிகளோ தொடர்ந்து வஞ்சிக்கப்படுவதோடு, நஞ்சை செழிக்கும் தஞ்சை - நாகை மாவட்டங்கள் பாலைவனமாக மாறி வருகின்றன. ஓட்டுக் கட்சி துரோகிகளைப் புறக்கணித்து, காவிரியில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட தமிழக மக்கள் கிளர்ந்தெழ வேண்டியதுதான் இனி பாக்கியிருக்கிறது.

## சீனாவில் ஏகாதிபத்திய மேட்டுக்குடிப் பெண்களின் இரு கும்பமேளா

**தன்னார்வக் குழுக்களின் போட்டி மாநாட்டில் இஸ்லாமிய தீவிரவாத அடக்கு முறைகளைக் கூறி கதறியழும் அல்ஜீரியப் பெண்கள்.**

சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் ஐ.நா. பெண்கள் 4-வது மாநாடும் இதற்குப் போட்டியாக அருகில் உள்ள ஹெய்ரோவில் தன்னார்வக் குழுக்களின் (NGO'S) மாநாடும் கடந்த ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் நடந்து முடிந்துள்ளன. "செயலுக்கான தளம்" என்ற முழக்கத்தை மாநாட்டின் நோக்கமாக பத்தாயிரக்கணக்கான பெண்களைத் திரட்டினர். அரசியல் கட்சி சார்பானவர்கள், வெளிநாட்டு நிதி பெறாத தன்னார்வத் தொண்டுள்ள நிறுவனத்தினர், கிராமத்திலுள்ள பெண்கள் அமைப்பினர் மற்றும் கருக்கலைப்பை எதிர்க்கும் கிறித்துவ மதப் பிற்போக்காளர்கள் முதல் பெண்களின் ஓரினச் சேர்க்கைக்கு உரிமை கோரும் ஏகாதிபத்திய சீரழிவாளர்கள் வரை அனைவரும் அனுமதிக்கப்பட்டனர். வாரிசு சொத்தில் பெண்களுக்குச் சம உரிமை, சட்டத்தில் குடும்பத்தில், ஊதியத்தில் பெண்களுக்கான சம உரிமைகள், பாலியல் வேறுபாடுகள், பெண்களின் உடல்நலம் - உதவிகள் - சலுகைகள் - விபச்சாரம் - கற்பழிப்பு - வரதட்சனை போன்ற கொடுமைகள், அரசியலில் பெண்கள் பங்கெடுப்பது எனப் பல தலைப்புகளில் இரு மாநாட்டிலும் பேசினார்கள். இந்தியாவிலிருந்து சென்றவர்கள் தலித் பெண்கள் பற்றியும் சிங்கப்பூருக்குப் பெண்கள் விற்கப்படுவது பற்றியும் பிரச்சினைகளை முன் வைத்தார்கள்.

உண்மையில் ஆப்பிரிக்க, ஆசியப் பகுதியிலுள்ள பின் தங்கிய நாடுகளில் உள்ள பெண்கள் நிலையும் அவர்கள் மீதான அநீதிகளும், அடக்குமுறைகளும்தான் மிகவும் கொடுமையானது. இவற்றையே இம்மாநாடு முக்கியத்துவம் கொடுத்து விவாதித்திருக்க வேண்டும். உலக அரங்கில் இன்றைக்குப் பெண்கள் முன்னேற்றத்திற்கான குறைந்தபட்ச உருப்படியான செயல்பாடு இதுவாகவே இருக்கும். மேலும் இப் பெண்கள் மீதான அனைத்துக் கொடுமைகளுக்கும்



அந்தந்த நாட்டு ஆணாதிக்க அரசு அமைப்பு முறைகளும் ஆட்சியாளர்களும்தான் காரணமாகவும் பாதுகாப்பாகவும் இருக்கிறார்கள். ஆனால் பின் தங்கிய நாட்டுப் பெண்களுக்கு சில பொருளாதார உதவிகளைச் செய்யக் கோரிய ஆலோசனைகள் மட்டுமே மாநாட்டுத் தீர்மானமாக இருக்கிறது. ஆணாதிக்க அரசு, ஆட்சியாளர்கள் பற்றியெல்லாம் விவாதிக்கப் படவில்லை. இன்னும் சொன்னால் "இந்தியாவில் பெண் சிசுக் கொலையே இல்லை" போன்ற புளுகுகளைக் கொண்ட அரசு தரப்பு அறிக்கை தான் ஐ.நா. மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதற்கு வெறும் கண்டனம் தெரிவித்து வார்த்தை-வாக்கிய அமைப்புகளில் திருத்தம் கோருவதைத்தான் தன்னார்வக்குழுக்களின் மாநாடு விவாதித்தது.

வளர்ந்த நாடுகளின் - மேலை நாடுகளின் பெண்களது கூச்சல்களும், சமத்துவமா (Equality), நியாயமா (Equity) போன்று வார்த்தைகளில் உள்ள பிரச்சினைகளையே விவாதித்தும், அவர்களுக்குத் தேவையான கருக்கலைப்பு - பாலுறவில் சுதந்திரம் போன்றவற்றில் முடிவெடுக்க முக்கியத்துவம் கொடுத்ததுமே இருந்தது. சுருக்கமாகச் சொன்னால் அமெரிக்க அதிபர் மனைவி கிளாரி கிளிண்டனையெல்லாம் அழைத்து ஏகாதிபத்திய மேட்டுக்குடிப் பெண்களின் இரு கும்பமேளா நடந்தன. இவற்றில் வேடிக்கைப் பார்க்கத்தான் அரசு செலவில், உதவியில் பின் தங்கிய நாட்டு பெண்நிலைவாதிகள் பலருக்கு அனுமதி கிடைத்தது.


படிப்பகம்

www.padippakam.com

## ஆந்திர ஆட்சிக் கவிழ்ப்பு:

# மாமனாரை வீழ்த்திய மருமகன் மீண்டும் குடும்ப ஆட்சி

"எஸ்.பி. - சி.எம்., என்.டி.ஆர். - பி.எம்." அதாவது சிவபார்வதி முதல்வர்; ராமாராவ் பிரதமர் என்று தமது அடிவருடிகளைக் கோஷம் போட வைத்து அகமகிழ்ந்த ஆந்திரத் தம்பதிகளின் கனவு நொறுங்கி விட்டது. தனது புது மனைவியை மாநில அரசியலுக்குப் பொறுப்பாக்கிவிட்டு, தான் மத்திய அரசில் ஒரு இடத்தைப் பிடித்து விட வேண்டும் என்ற கனவில் தேசிய முன்னணி மூலம் தமிழகத்தில் ஜெயா கும்பலை எல்லாம் வளைத்துப் போட முயன்று எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான தயாரிப்புகளைச் செய்து வந்தார், ராமாராவ். ஆனால் இவரது மருமகன் சந்திரபாபு நாயுடு நிகழ்த்திய ஆட்சிக் கவிழ்ப்பு மூலம் எல்லாம் பாழாகி விட்டன.

தெலுங்கு தேசக் கட்சியின் பெரும்பான்மை எம்.எல்.ஏ-க்களை அடைத்து வைத்த சந்திரபாபு நாயுடுவுக்கு எதிராகப் போர் தொடுத்தும், பின்னர் மக்களிடையே சென்று கதறியழுதும், சட்டமன்றத்தை முற்றுகையிட அழைப்பு விடுத்தும் எவ்விதப் பயனும் நிகழாது போகவே முதல்வர் பதவியை இராஜினாமா செய்து விட்டு மருத்துவமனையில் படுத்து அனுதாபம் தேடினார், ராமாராவ். 1984-இல் பாஸ்கரராவ் ஆட்சியைக் கவிழ்த்த பின் அதை மீட்டுத் தர இருந்த மக்கள் ஆதரவு இப்பொழுது இல்லாதது கண்டு நொந்து போனார். "மீண்டும் கட்சியைக் கட்டுவேன், மக்களைச் சந்திப்பேன்" என்று ஒப்பாரி வைத்துக் கொண்டிருக்கிறது, இக்கிழப் புலி.

என்.டி.ஆரின் இரண்டாவது மனைவி லட்சுமி சிவபார்வதி கட்சி மற்றும் ஆட்சி விவகாரங்களில் தலையிட்டதுதான் ஆட்சிக் கவிழ்ப்பு நிகழ்த்துவதற்கு முக்கிய காரணமாகியுள்ளது. குடும்பத்தினரில் ராமாராவின் மகன் ஹரி கிருஷ்ணா, மருமகன்கள் சந்திரபாபு நாயுடு, வெங்கடேஸ்வர ராவ் ஆகியோரே கட்சியிலும் அரசியலிலும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இதில் மருமகன்கள் தனித்தனி கோஷ்டி கட்டி மோதி வந்தனர். தந்தைக்கு அடுத்த அரசியல் வாரிசு கனவில் மிதந்து வந்தார் ஹரி கிருஷ்ணா. இவர்களைக் கட்சியிலும் அரசியலிலும் இருந்து தனிமைப்படுத்தத் திட்டமிட்டு என்.டி.ஆர். மூலம் சில நடவடிக்கைகளை மேற்கொண்டார், சிவபார்வதி.

தெக்காலி இடைத்தேர்தலிலும், உள்ளூராட்சி தேர்தல்களிலும் கட்சி பதவிகளிலும் அரசு பதவிகளில் உள்ள நியமனங்களிலும் சிவபார்வதி தனது ஆதரவாளர்களையே அமர்த்தினார்; எதிரானவர்களையெல்லாம் வெளியேற்றினார்.

கட்சிக்கும் ஆட்சிக்கும் அப்பாற்பட்ட சிவபார்வதியின் அரசியல் தலையீட்டால் வெறுப்புற்றவர்களையெல்லாம் தம்பின்னே திரட்டுவதில் வெற்றி பெற்றார், சந்திரபாபு நாயுடு. எதிர் கோஷ்டியான வெங்கடேஸ்வர ராவ் மற்றும் ராமாராவின் சட்ட ஆலோசகர் என்று குறிப்பிடப்படும் அமைச்சர் அசோக் கஜபதி ராஜு தலைமையிலான எம்.எல்.ஏ-க்களும் சிவபார்வதியை எதிர்ப்பதற்காக சந்திரபாபு நாயுடுவுடன் கை கோர்த்துக் கொண்டனர். சிவபார்வதியைக் காட்டியே ராமாராவிற்கு எதிராக மகன்களையும், மகள்களையும் தம்பக்கம் இழுத்துள்ளார், சந்திரபாபு நாயுடு. இவர்களுக்கு இடையிலான ஒற்றுமையும் தற்காலிமானதுதான். தற்போதே, "சந்திரபாபு நாயுடு முதல்வரானதும் தருவதாகக் கூறிய உதவிகளை இன்னும் எங்களுக்குத் தராமல் இழுத்தடித்து வருகிறார்" என்று பலவாறாகக் குற்றச்சாட்டுக்களை வைக்கத் தொடங்கி விட்டார்கள்.

தெலுங்கு தேசக் கட்சி ஆட்சியைப் பிடித்ததும் காங்கிரசு கட்சியிலிருந்து ஓடிவந்து ஒட்டிக் கொண்டு கட்சியில் முக்கிய இடம் பிடித்தவர் சந்திரபாபு நாயுடு. ஸ்ரீராம் சாகர் நீர்ப்பாசனத் திட்ட ஊழல், விஷ்ணுப்பிரியா நட்சத்திர ஓட்டல் மோசடிகளில் சம்பந்தப்பட்ட சந்திரபாபு நாயுடு, கட்சி அமைப்புகளைத் திறம்பட நிர்வகித்து வருபவர் எனப் பெயரிட்டு தனக்கென ஒரு கோஷ்டி கட்டினார். இடையில் என்.டி.ஆருடன் முரண்பட்டு காங்கிரசுக்கு ஓடிப் போக இருந்தபோது மீண்டும் ஒரு பதவி கொடுத்ததும் சமாதானமானர். கட்சியின் பொதுச் செயலாளர் பி. உபேந்திராவை ஓரங்கட்டி அப்பதவியைக் கைப்பற்றினார். தற்போது காங்கிரசின் ஆதரவுடன் தான் ஆட்சிக்கவிழ்ப்பு நிகழ்த்தினார் என்பதும் நம்பத்தகுந்த ஒன்றே.

என்.டி.ஆர்., " 2 ருபாய்க்கு ஒரு கிலோ அரிசியும், கோதுமையும் போடுவதாகவும், சாராயத்தைத் தடை செய்வதாகவும்" கவர்ச்சிவாத வாக்குறுதி ஒன்றை வழங்கி நடைமுறைப்படுத்தினார். இதனால் ஆட்சிக்கவிழ்ப்பு நிகழ்த்துவதற்கு சந்திரபாபு நாயுடுவிற்கு ஆந்திர சாராய பெருமுதலாளிகள் பக்க பலமாக நின்றார்கள். முதல்வரானதும் சந்திரபாபு நாயுடு, என்.டி.ஆர். அறிவித்த கவர்ச்சி திட்டங்களை, தான் மறுபரிசீலனை செய்யப்போவதாக அறிவித்ததைப் பார்க்கலாம். குறிப்பிட்ட வகை சாராயத்திற்கு உள்ள தடைகளை நீக்குகிற வேலைகளிலும் இறங்கி விட்டார்.

தேசிய முன்னணியின் தலைவராக உள்ள என்.டி.ஆரின் ஆட்சி போகிறது என்றால் அது மேலும் ஒரு இழப்பு என்பதால் கடைசி வரை அவர் ஆட்சியைப் பாதுகாக்க சமரச முயற்சிகளைத் தேசிய முன்னணி, ஜனதா தளத் தலைவர்கள் மேற்கொண்டனர். இதில் தோல்வியைச் சந்தித்தபின் சந்திரபாபு நாயுடுவை ஒரு தலைவராக அங்கீகரித்துக் கொண்டு இணக்கமான உறவை வளர்த்துக் கொண்டார்கள். இப்படி எப்படியாவது முட்டுக் கொடுத்துக் கொள்ள வேண்டிய பரிதாப

**என்.டி.ராமாராவும் சந்திரபாபு நாயுடுவும்; கவர்ச்சி-பொறுக்கி அரசியலில் விஞ்சிநிற்பவர் யார்?**





படிப்பகம்

www.padippakam.com

நிலை, தேசிய முன்னணிக்கு!

"சந்திரபாபு நாயுடுவுக்கு மக்களிடம் செல்வாக்கு கிடையாது; என்.டி. ஆருக்குத்தான் மக்களிடம் செல்வாக்கு உள்ளது; எனவே அடுத்த தேர்தலில் சந்திரபாபு நாயுடுவைத் தோற்கடித்து என்.டி. ஆர். ஆட்சிக்கு வந்தாலும் வரலாம்" என்று கணிப்புகளை, ஆருடங்களை அரசியல்வாதிகள், பத்திரிகையாளர்கள் கூறிக் கொண்டுள்ளனர். "என்.டி.ஆர். தான் கட்சி; கட்சிதான் என்.டி.ஆர்" என்றிருந்த போது எப்படி வீழ்த்தப்பட்டார் என்று வியப்படைகிறார்கள்.

பாசிஸ்டுகளுக்கு நிழல்கூட துரோகமிழைக்கும்; தனிமனித சொத்தாகக் கட்சியையும் ஆட்சியையும் பாவிக்கிற சர்வாதிகாரிகளுக்கு இதுதான் கதி. ஒன்று எதிரிகளால் கொல்லப்படுகிறார்கள்; அல்

> ஜனநாயக விரோத அமைப்பு முறையும் பிழைப்புவாதிகளும் கொண்ட கட்சிகளில் கோஷ்டி மோதல்களும் ஒருவரை ஒருவர் காலைவாரி விட்டுக் கொள்வதும் தவிர்க்க முடியாதவையே

லது அடிவருடிகளால் கவிழ்க்கப்படுகிறார்கள். ஜனநாயக விரோத அமைப்பு முறையும் பிழைப்புவாதிகளும் கொண்ட கட்சிகளில் கோஷ்டிப் பூசல்களும், மோதல்களும் ஒருவரை ஒருவர் காலைவாரி விட்டுக் கொள்வதும் தவிர்க்க முடியாதவையே. எந்நேரமும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருப்பது போல் பதவியைக் கையில் பிடித்திருக்க வேண்டியது கட்டாயத் தலைவலி. பாசிஸ்டு என்.டி.ஆர். கவர்ச்சி அரசியல் மூலம் மக்களிடையே ஒரு மாயையைத் தோற்றுவித்து அதையே தமக்கு ஒரு அரணாக்கிக் கொண்டு இருந்தாலும் "நித்திய கண்டம் பூரண ஆயுசு" என்ற முறையில்தான் அரசியல் நடத்தி வந்தார். எம்.ஜி. ஆரைப் போல தனது ஆசைநாயகியை வலிந்து அரசியலில் திணித்தாலும் என்.டி.ஆர். ஒரு படி மேலே போய் ஆட்டம் போட்டு அதன் விளைவை உடனடியாகச் சந்தித்து விட்டார் அவ்வளவுதான்.

● சுப்பு

# கம்யூனிசம் தோற்றதாம்! முதலாளித்துவம் வென்றதா?

சர்வதேசப் பாட்டாளிகளின் மாபெரும் தலைவர் மாசேதுங், சீனத்தில் மக்கள் ஜனநாயகத்தையும் அதைத் தொடர்ந்து சோசலிசத்தையும் நிர்மாணித்தவர். சீனா தொடர்ந்து சோசலிசப் பாதையில் முன்னேறுவதைத் தடுத்து, ஒரு தரகு முதலாளித்துவத்தை நிறுவுவதற்கு சீனப் பொதுவுடமைக் கட்சிக்குள் ஒளிந்து கொண்டிருந்த துரோகிகளும், வெளியிலிருந்து ஏகாதிபத்திய சதிகாரர்களும் எத்தணித்துக் கொண்டிருக்கையில் அவர்களை எச்சரிக்கும் முகமாக மாசேதுங் சொன்னார்:

"அவர்கள் சீனாவில் மீண்டும் முதலாளித்துவத்தை நிலைநாட்ட முயற்சிக்கிறார்கள். ஆனால் அது அவ்வளவு எளிதானதல்ல. அப்படிச் செய்வது அவர்கள் வாய்கொள்ளாத அளவு, மெல்ல முடியாத அளவு பெரிய துண்டைக் கடித்துக் கொண்டு முழிப்பதைப் போலாகிவிடும்."

இது சீனாவுக்கு மட்டுமல்ல; சோசலிசப் பாதையில் அடி எடுத்து முன்னேறிய எல்லா நாடுகளுக்கும் பொருந்தும். இந்த உண்மையை சீனத்தில் மட்டுமல்ல முன்னாளைய சோசலிச நாடுகளான சோவியத் ஒன்றியத்திலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் இன்று கண்கூடாகக் காண்கிறோம். இந்த நாடுகளில் பாட்டாளி வர்க்க சர்வாதிகார ஆட்சியை உள்ளிருந்தே சிதைத்து, அதிகாரத்தைக் கைப்பற்றிய முதலாளித்துவப் பாதையாளர்கள், முப்பது ஆண்டுகளாக அதிகார வர்க்க முதலாளித்துவ அமைப்பை நிறுவி ஆண்டு வந்தனர். அந்த நாடுகளில் பல்வேறு காரணங்களால் அந்த அதிகார வர்க்க முதலாளித்துவம் நீடித்திருந்தாலும் (சோவியத் ஒன்றியம் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் 30 ஆண்டுகளாகவும், இன்னும் சீனா, வியத்நாம், கியூபா போன்ற நாடுகளில் 15 முதல் 20 ஆண்டுகளாகவும்) அதையே கூட அவை தக்க வைத்துக் கொள்வது அவ்வளவு எளிதானதாக இல்லை. மாசேதுங் சொன்னதைப் போல் வாய்கொள்ளாத அளவு பெரிய துண்டைக் கடித்துக் கொண்டு மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் விக்கித் திணறிப் போனார்கள்.

அதிகாரத்தைக் கைப்பற்றி முப்பதாண்டுகளுக்கு மேலாகியும், தமது எல்லா நெருக்கடிகளுக்கும் கம்யூனிசத் தலைவர் ஸ்டாலின் மீதே பழி தூற்றி வந்தனர். அடுத்தடுத்து பல அரண்மனை ஆட்சிக் கவிழ்ப்புகள் நடத்திவிட்டு ஸ்டாலினியவாதிகள் தூக்கியெறியப்பட்டதாக ஒருவர் மீது அடுத்தவர் முத்திரை குத்தினர். உண்மையில் ஸ்டாலினும் அவரது வழிவந்தவர்களும் கட்டியெழுப்பியிருந்த சோசலிசக் கட்டுமானம்தான் இந்த அதிகாரவர்க்க முதலாளிகள் ஓரளவுக்காவது பொருளாதாரப் பிரச்சினைகள் - தேவைகளைச் சமாளிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. எண்ணெய், நிலக்கரி, இரும்பு, எஃகு, நீர்ப்பாசனம் ஆகிய தொழில் - விவசாய உற்பத்தி தொடர்வதற்கான அடிப்படைக் கட்டுமானங்கள் அந்த சோசலிசப் படைப்பாளிகள் பங்களித்தவையாகும்.

சோசலிசக் கட்டுமானத்தின் அடிப்படை அங்கங்களாகிய கூட்டுப் பண்ணைகளையும், அரசுடைமையாக்கப்பட்ட ஆலைகள் - தொழில்கள் - வர்த்தகத்தையும் புதிய அதிகாரவர்க்க முதலாளிகள் தமது சுரண்டலுக்கான அடிப்படைகளாக மாற்றிக் கொண்டு சோசலிச, கம்யூனிச அமைப்பு நீடிப்பதாக உழைக்கும் மக்களை ஏய்த்து வந்தனர். ஏகாதிபத்திய சுரண்டல் ஒடுக்கு முறைகளுக்கு எதிராக சோசலிச நாடுகளின் தோழமையான உதவி என்கிற பெயரில் கொள்ளையிட்டுத் தமது நாட்டுத் தேவைகளுக்கு ஈடுகட்டினர். ஏகாதிபத்திய போர் அபாயம் என்கிற பெயரில், போட்டி போட்டுக் கொண்டு ஆயுதக் குவிப்பில் வெறியோடு ஈடுபட்டனர். அமெரிக்க மேல்நிலை வல்லரசுக்கு எதிராக உலக மேலாதிக்கத்துக்கான போட்டியில் இறங்கிய சோவியத் ஒன்றிய

> எல்லா இழிகேடுகளுக்கும் ஸ்டாலின் மீது பழிபோடும் புதிய ஏகபோக முதலாளிகளும் அவர்களுடைய மேற்கத்திய கூட்டாளிகளும் வாக்களித்தவாறு ஜனநாயகத்தையோ பொருளாதார முன்னேற்றத்தையோ சாதிக்க முடியவில்லை



படிப்பகம்

www.padippakam.com


மேல்நிலை வல்லரசும், அதன் தொங்கு சதை நாடுகளான பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் மீள முடியாத அரசியல் - பொருளாதார நெருக்கடிகளுக்குள் வீழ்ந்தன.

இவற்றைச் சமாளிப்பதற்கு ஏகாதிபத்திய முகமையாளன் கோர்ப்பசேவ் துவக்கி வைத்த மறு சீரமைப்பு மற்றும் ஜனநாயகப்படுத்துதல் மூலம் சோசலிச, கம்யூனிச முகமூடியைக் கழட்டிவிட்டு, அதிகாரவர்க்க முதலாளித்துவத்தினிடத்தில், மேலை நாடுகளின் வகையிலான அப்பட்டமான ஏகபோக முதலாளித்துவத்தைப் படிப்படியாக நிறுவ முயன்றனர். ஆனால் அவர்கள் கனவு கண்டதைப் போல அது அவ்வளவு எளிதாகவும் விரைவாகவும் ஈடேறவில்லை. இரத்தக் களறியுடன் கூடிய பல அதிரடி ஆட்சிக் கவிழ்ப்புகளுக்கே வழிவகுத்தது. அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்காக புதிய ஏகபோக முதலாளிகளிடையே நடக்கும் வன்முறைமோதல்கள் இன்னமும் முடிந்தபாடில்லை. இருந்தபோதும் எல்லா இழிகேடுகளுக்கும் இன்னமும் ஸ்டாலின் மீதும் ஸ்டாலினியவாதிகள் மீதும் பழிபோடுவது நீடிக்கிறது. அதே சமயம் புதிய ஏகபோக முதலாளிகளும் அவர்களுடைய மேற்கத்திய கூட்டாளிகளும் வாக்களித்தவாறு ஜனநாயகத்தையோ, பொருளாதார முன்னேறறத்தையோ கொண்டு வர முடியவில்லை.

ஸ்டாலினிசத்தின் கீழ் மக்கள் சொல்ல முடியாத பல கொடிய துன்பங்களை அனுபவித்ததாகவும், யுத்தத்துக்கான தயாரிப்பில் நாட்டின் பொருளாதாரம் மூழ்கடிக்கப்பட்டதாகவும் ஜெர்மனி நாஜி இட்லரை விட ஸ்டாலின் கொடூரமானவர் என்றும் தொடர்ந்து குற்றஞ்சாட்டப்படுகிறது; அவரது தனிப்பட்ட சொந்த வாழ்க்கையின் மீதும் அவதூறு சேறு பூசப்படுகிறது. ஆனால், இன்றைய புதிய ஏகபோக முதலாளிகள் சோவியத் ஒன்றியம் மற்றும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு உள்ள நிலைமை என்ன? இட்லருக்கு இணை வைத்துச் சொல்லப்படும் ''ஸ்டாலினிச'' காலத்தையும், அதற்கு முந்தைய ஜாரிசக் காலத்தையும் விடப் பல ஆயிரம் மடங்கு கொடூரமானதாகத் தான் உள்ளது.

பாட்டாளிகளின் தலைமையிலான புரட்சியும் அதன் பிறகு ஏற்பட்ட சோசலிசக் கட்டுமானமும் அந்நாடுகளின் உற்பத்தி சக்திகளுடைய வளர்ச்சியில் மட்டுமல்ல; புதிய உற்பத்தி உறவுகளையும் அதன் விளைவாக மக்களிடையே புதிய சமூக, அரசியல், பண்பாட்டுத் துறையிலும் புதிய மேலான உறவுகளையும் வாழ்க்கை முறைகளையும் கொண்டு வந்துவிட்டன. உதாரணமாக, ஜாரிச ஆட்சியில் விவசாயத்தில் தனியுடமை முறை நிலவியது. அதன் பிறகு சோசலிசத்தின் கீழ், கூட்டுப் பண்ணைமுறை வந்தது. நிலம் அரசுடமையாக்கப்பட்டு, கூட்டுப் பண்ணைகளில் குவிக்கப்பட்டு, உழவு, களையெடுப்பு, பூச்சி மருந்து தெளிப்பு, அறுவடை முதலியவை நவீனமயமாக்கப்பட்டு, இயந்திரமயமாக்கப்பட்டது. முதலாளித்துவத்தை மீண்டும் நிலை நாட்டிய இன்றைய நிலையில் கூட்டுப் பண்ணைகளாக்கப்பட்ட நிலங்களைப் பகிர்ந்தளித்து விவசாயத்தைத் தொடர்வதும் சாத்தியமில்லை. அல்லது கூட்டுப் பண்ணைகளையே தொழில் கழகங்கள் - கூட்டுப் பங்கு கம்பெனிகளாக்கி, தனியாருக்குப் பங்குகளை விற்பதும், அதிகாரவர்க்கத்தினரை வைத்து நிர்வகிப்பதும் முந்தைய அதிகார வர்க்க முதலாளித்துவத்தை விடப் பெரும் மாறுதல்களைக் கொண்டு வந்து விடாது.

எளிமையான ஒரு உதாரணம். சீனாவில் புரட்சி வெற்றிபெற்ற பிறகு ''உழுபவருக்கே நிலம் சொந்தம்'' என்



**யெல்ட்சினின் இன ஒடுக்குமுறைக்குப் பலியாகும் செசன்ய அப்பாவி மக்கள்**

கிற முறையில் மறுபங்கீடு நடந்தது. ''ஒரு குதிரையின் நான்கு கால்கள் நான்கு விவசாயக் குடும்பங்களுக்கு சொந்தமாக்கப்பட்டன.'' இது சோசலிசத்தை நோக்கிய முதற்படி தான்; என்றாலும், விவசாயிகளிடையே ஒரு புது உறவை ஏற்படுத்துவதாகும். அவர்கள் கூட்டாகக் குதிரையைப் பராமரித்து, தனித்தனித் தேவைகளுக்குத் தகுந்தவாறு பயன்படுத்திக் கொண்டனர். பின்னர் கூட்டுப் பண்ணை உறவுகள் ஏற்பட்டும் விட்டது. அந்த நிலையில் தனியுடமைப் பொருளாதாரத்தை மீண்டும் கொண்டுவர முடியுமா? கூட்டுடமையாக்கப்பட்ட குதிரையின் நான்கு கால்களைத் தனித்தனியே வெட்டிப் பங்கீடு செய்து தனியுடமையாக்குவதா? இல்லை நால்வரில் வலுத்த ஒருவன் குதிரையையே அபகரித்துக் கொள்வதா?

இது போன்றுதான் சகல பிரச்சினைகளிலும் முதலாளித்துவத்துக்குத் திரும்புவதில் நெருக்கடிகளை முன்னாள் சோசலிச நாடுகள் எதிர்கொண்டுள்ளன. அங்கு முதலாளித்துவத்துக்குத் திரும்பும் போக்கில் உழைக்கும் மக்கள் படும் துயரங்களோ எண்ணிலடங்காதவை.

சோவியத் ஒன்றியம் மற்றும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளைப் பலவீனப்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக அங்கு தேசிய இனப் பகைமை, பூசல்களைத் தூண்டி விடுவதற்கு மேற்கு ஏகாதிபத்தியங்கள் தொடர்ந்து பல ஆண்டுகளாக சதிகள் புரிந்து வந்திருக்கின்றன.

மேற்கு ஐரோப்பாவில் கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் முதலாளித்துவ வளர்ச்சிப் போக்கின் இயல்பில் தேசிய இனங்களும், தேசிய இன அரசுகளும் உருவானதைப் போல கிழக்கு ஐரோப்பாவிலும் யுரேசிய எல்லைப் பகுதிகளிலும் உருவாகவில்லை. கிழக்கில் ஜப்பானிய, மஞ்சூரியப் பேரரசுகள், தெற்கில் துருக்கியின் ஓட்டோமான் பேரரசு, கிழக்கு ஐரோப்பாவில் ருஷ்ய ஜாரிசப் பேரரசு ஆகியவற்றின் ஆக்கிரமிப்புகளை எதிர்கொண்டு நின்ற பல்வேறு சிற்றரசுகளும் இணைந்து தற்காப்பு போர்கள் நடத்தி பல இனங்களின் கூட்டரசுகளை நிறுவின. அவற்றின் வளர்ச்சிப் போக்கில் பேரினவாத ஒடுக்குமுறை உருவாகியது.

முதலாம் உலகப் போரினாலும், அதற்குப் பிந்தைய ஆண்டுகளிலும் நடந்த இராணுவ, ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புகளாலும் இத்தகைய இன ஒடுக்குமுறையில் சிக்கி பல சிறு தேசிய இனங்களும் அல்லலுற்றன. இப்பிரச்சினையைச்


படிப்பகம்

www.padippakam.com

சரியானமுறையில் அணுகித் தீர்வு காண்பதற்கு ஸ்டாலின் முன்வைத்த கோட்பாட்டைப் போற்றி அங்கீகரித்தார், லெனின். அப்போதுதான் உலக வரலாற்றில் முதன் முறையாக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய பல தேசிய இனங்களின் குடியரசுகளை உள்ளடக்கிய ஒரு பெரும் நாடாக சோவியத் ஒன்றியம் உருவானது. இரண்டாம் உலகப் போரின்போது இத்தாலியின் பாசிச மற்றும் ஜெர்மனியின் நாஜிச ஆக்கிரமிப்பின் கீழ் ஒடுக்கப்பட்ட பல கிழக்கு ஐரோப்பிய தேசிய இனங்களும் ஸ்டாலின், டிட்டோ, டிமிட்ரோவ் போன்ற கம்யூனிசத் தலைவர்களின் தலைமையில் செஞ்சேனையில் அணி திரண்டு, எதிர்ப்புப் போர் புரிந்து வென்ற பிறகு பல தேசிய இனங்களைக் கொண்ட மக்கள் ஜனநாயக அரசுகள் உருவாகின. அவை தேசிய இன சுயநிர்ணய உரிமையுடன் கூடிய குடியரசுகளை அமைத்துக்



மருத்துவமனையில் போஸ்னிய முஸ்லிம் போராளிகள்

கொண்டு சோசலிசப் பாதையில் முன்னேறின. சோவியத் ஒன்றியத்தில் ஸ்டாலின் மறைவுக்குப் பின்னர் குருச்சேவ் - பிரஷ்னேவ் கும்பலின் அதிகார வர்க்க முதலாளித்துவ பாசிச ஆட்சி வந்தது. அதைத் தொடர்ந்து பல தேசிய இன, தேசிய சிறுபான்மையின ஒடுக்குமுறை அங்கும், பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் நிறுவப்பட்டது.

இந்த வரலாற்று உண்மைகள் மறைக்கப்பட்டு, ஸ்டாலினது சர்வதிகார அரசினால் பல யுரேசிய தேசிய இனங்கள் வலுக்கட்டாயமாக சோவியத் ஒன்றியத்தில் இணைக்கப்பட்டதாகவும், இரண்டாவது உலகப் போரைப் பயன்படுத்தி அவரும், வேறுபிற ஸ்டாலினியவாதிகளும் பல ஐரோப்பிய தேசிய இனங்கள் மற்றும் தேசிய சிறுபான்மையினங்களைக் கூறுபோட்டும், மிரட்டியும் சோவியத் ஒன்றியம் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடன் இணைத்துக் கொண்டதாகவும் மேற்கு ஏகாதிபத்தியங்கள் பித்தலாட்டப் பிரச்சாரம் செய்தன. இந்நாடுகளில் ''கம்யூனிச'' அரசுகளை ஒழித்து ''ஜனநாயக'' அரசுகளை நிறுவினால்தான் இந்த தேசிய இனங்கள் விடுதலையையும் சமத்துவத்தையும் அடைய முடியும் என்று கூறி இனவெறிக்குத் தூபம் போட்டன. ஆனால் முதலாளித்துவத்தை மீட்பதில் அவர்கள் வெற்றி பெற்றபோதும், அவர்கள் வாக்களித்தபடி தேசிய இனங்கள் மற்றும் தேசிய சிறுபான்மை இனங்களுக்கு உண்மையில் விடுதலை கிடைத்ததா? இல்லை; இந்த இனங்களிடையே கொடூரமான அழிவுப் போர்கள் வெடித்தன; முதலாளித்துவத்தின் கீழ் தேசிய இனங்களின் சுயநிர்ணய, ஜனநாயக உரிமை தருவதாக வாக்களித்த அதே ஏகாதிபத்திய பங்காளிகளின் அரசின் இனவெறிப் படுகொலைகளும்தான் தொடரும் துயரங்களாகிவிட்டன.

சோசலிச அரசின் கீழிருந்தாலும் சரி, அதிகாரவர்க்க முதலாளித்துவத்தின் கீழிருந்தாலும் சரி ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் சுயநிர்ணய உரிமையும், பிரிந்து போகும் உரிமையும் கோருவதில், அதை ஈடேற்றிக் கொள்வதில் நியாயம் உண்டு. ஆனால், சோசலிசக் கட்டுமானத்தின் கீழ் கணிசமான அளவு முன்னேறிய பிறகு, அதாவது இனக் கலப்புகளும், குடியேற்றங்களும் பல ஆண்டுகளாக நடந்துவிடும் ஒரு நாட்டில் மீண்டும் தேசிய இனப் பிரிவுகளின் அடிப்படையில் நாட்டைக் கூறுபோடுவதில் எழும் பிரச்சினைகளையும் துயரங்களையும் முன்னாள் சோவியத் ஒன்றியமும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் இப்போது எதிர் கொண்டு வருகின்றன.

லெனின் தலைமையிலான 1917 அக்டோபர் புரட்சியும், ஸ்டாலின் தலைமையிலான சோசலிசக் கட்டுமானமும் உருவாக்கிய சோவியத் மனிதர்கள் உலக அதிசயங்களோடு ஒப்பிடும் அளவுக்கான அற்புதங்களை சோவியத் ஒன்றியத்தில் மிகக் குறுகிய காலத்தில் நிகழ்த்திக் காட்டினார்கள். அமெரிக்காவும் பிற ஏகாதிபத்தியங்களும் 200 ஆண்டுகளில் ஏற்படுத்திய விவசாய - தொழிற்துறை, சாதனைகளை இருபதே ஆண்டுகளில் சோவியத் மனிதர்கள் சாதித்தனர். கிழக்கே பெரியார், நேரு, தாகூர், சுகர்னோ முதல் மேற்கே பெட்ராண்ட் ரஸ்ஸல், பெர்னார்டு ஷா, சார்லி சாப்ளின் வரை பல நாடுகளைச் சேர்ந்த ''அறிஞர்கள், தலைவர்கள்'' அனைவரும் பிரமித்துப் போய் பாராட்டினார்கள். பிரமாண்டமான கால்வாய்கள், எண்ணெய் வயல்கள் - சுத்திகரிப்பு ஆலைகள், இரும்பு - நிலக்கரிச் சுரங்கங்கள் - ஆலைகள், புதுப்புது நவீன விவசாய இயந்திர ஆலைகள் - பெரும்பண்ணைகள் எழுப்பினர். முதல் உலகப்போரின் முடிவில் ரொட்டிக்கும் சமாதானத்துக்கும் கதறிய அதே மக்கள் சுயதேவைக்கு மட்டுமல்ல ஏற்றுமதிக்கும் உணவு தானிய உற்பத்தியைப் பெருக்கினர். பாசிச - நாஜிச இராணுவங்களை முறியடித்து உலக சமாதானத்தை நிலை நாட்டிய செஞ்சேனையைக் கட்டி எழுப்பினர். வரலாற்றில் மிகப் பெரிய குடியேற்றங்களும், தேசிய இனக் கலப்புகளும் ஏற்படாமல் இந்த முன்னேற்றங்களைச் சாதித்திருக்கவே முடியாது.

இதனால், சோவியத் ஒன்றியத்திலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் எளிதில் அவிழ்க்க முடியாத சிக்கல் மிகுந்ததாக தேசிய இனங்களிடையே உறவுகள் ஏற்பட்டு விட்டன. எனவே, அந்த நாடுகளை இன அடிப்படையில் பிளவுபடுத்துவது இரத்தமயமானதாக உள்ளது. ஒரே அரசின் கீழிருந்த சோவியத் குடிமக்கள் துரோகி கோர்பச்சேவ், சதிகாரன் யேல்ட்சின் கைங்கரியத்தினால் 15 தனித்தனி தேசிய இன அரசுகளாகப் பிரிக்கப்பட்டு ஒருவருக்கொருவர் அந்நியராயினர். ஆலைகள் - பண்ணைகளின் நிர்வாகிகளாகவும், உழைப்பாளர்களாகவும் இருந்தவர்கள் திடீரென்று அந்நியக் குடியேற்றக்காரர்களாகவும், செஞ்சேனையினர் ஆக்கிரமிப்பு இராணுவமாகவும் கருதப்பட்டனர்.

2.5 கோடி ருசியர்கள், 14 வேறு இனக் குடியரசுகளில் வாழும் அதே சமயம் ருசியர் அல்லாத 1.8 கோடிப்பேர் தங்கள் இனமல்லாத வேறு வேறு இனக் குடியரசுகளில் வாழுகின்றனர். அதாவது 4.3 கோடிப் பேர் ''வேற்று'' இனக் குடியரசுகளில் வாழுகின்றனர். இப்பொழுதுள்ள ருசியக் குடியரசின் 14.6 கோடி மக்களில் 81.5 சதவீதத்தினர் மட்டுமே



படிப்பகம்

www.padippakam.com

ருசிய மொழி இனத்தவர். மீதி 18.5 சதவீ தத்தினர் வேறு மொழி இனத்தவர். பால்டிக் கடற்பகுதியில் தனி நாடுகளாக ஆகிவிட்ட லாட்வியாவில் 34 சதவீதத்தினரும், எஸ்தோனியாவில் 30.3 சதவீதத்தினரும், லித்துவேனியாவில் 9.4 சதவீதத்தினரும் ருசியர்கள். 5.2 கோடி மக்கள் வாழும் உக்ரைனின் கிழக்குப் பகுதி முழுவதும் ருசியமயமானது; அதன் கிரிமியன் தீபகற்பத்தில் முக்கால் வாசிப்பேர் ருசியர். பைலோ ரசியா குடியரசு என்பதே வெள்ளை ருசியர்களின் நாடு என்று தான் பொருள்; அதன் இராணுவத்தில் பெரும்பான்மையோர் ருசியர்.

1.2 கோடி ருசியர்கள், மத்திய ஆசியக் குடியரசுகளில் குடியேறியுள்ளனர். 1.7 கோடிப்பேர் வாழும் கஜக்ஸ்தானில் 40 சதவீதத்தினர் ருசியர்கள்; அந்நாட்டின் தலைநகர் அல்மா அட்டாவிலும், கிர்கிஸ்தானின் தலைநகர் பிஷ்கேக்கிலும் 55 சதவீதமானவர்கள் ருசியர்கள். துருக்மேனியக் குடியரசின் தலைநகர் ஆஷ்காபாத்திலும், உஸ்பெகிஸ்தான் குடியரசின் தலைநகர் தாஸ்கெண்டிலும் 35 சதவீதத்திற்கும் மேலானவர்கள், ருசியர்கள்.

இவ்வாறு வேறு பிற இனக் குடியரசுகளில் ருசியர்கள் குடியேற்றம் மற்றும் இனக்கலப்பு ஏற்பட்டுள்ளது மட்டுமல்ல, ஜியார்ஜியா மற்றும் அர்மேனிய இனத்தவர்களும், அர்மேனிய மற்றும் அஜர்பைஜான் இனத்தவர்களும் இத்தகைய குடியேற்றம், இனக் கலப்புகளுக்குள்ளாகி இருக்கின்றனர். இதனால் வேறு வேறு இனத்தவர் கலந்து வாழும் பிரதேசங்கள் பலவும் பிரிவினையின் போது இரத்தக்களறி வெடிப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளன. அதே போல ஒரு தேசிய இனக் குடியரசுக்குள்ளாகவே கிறித்தவர்கள், இசுலாமியர்கள் என்கிற மத அடிப்படையிலான வேறுபாடுகளும் உள்நாட்டுப் போர்கள் வெடிக்கக் காரணமாகி உள்ளன.

இப்போது ருசியா என்று பிரபலமாகியுள்ள "ருசிய சோவியத் சோசலிசக் குடியரசுகளின் கூட்டமைப்பு" மட்டுமே 21 குடியரசுகளும், ஒரு சுயாட்சிப் பிரதேசமும், பத்து சுயாட்சி மாவட்டங்களையும் கொண்டிருந்தது. இங்கு வாழும் தாத்தார்கள், பாஷ்கிர்கள், செசியர்கள், துவாக்கள், சுவாக்கள், புரியாத்தாக்கள் போன்ற 120-க்கும் மேற்பட்ட மொழி இன, தேசிய இனச் சிறுபான்மையினர் மட்டும் 2.5 கோடிப்பேர். ருசியக் குடியரசின் ஆளுகையின் கீழ் உள்ள தூந்தரகாகசிய மலைகள் - காடுகளிலும் பரந்து விரிந்த சைபீரிய சமவெளிகளிலும் வாழும் இந்தச் சிறுபான்மையினர் பல மொழிகளும் பேசுபவர்கள்; இசுலாம், கிறித்தவம், பௌத்தம் ஆகிய வெவ்வேறு மத நம்பிக்கையுடையவர். சுதந்திர உணர்வும் போர்க்குணமும், மொழி-மத-பண்பாட்டுப் பெருமை பாராட்டுபவர்கள். இவ்வளவு பன்முகத் தன்மையுடைய சிறுபான்மைப் பிரிவு மக்கள் அனைவரையும் சரியான அரசியல் பொருளாதார, சமூகக் கொள்கைகளினால் அரவணைத்துக் கொண்டிருந்தது சோசலிச அமைப்பு. அவர்கள் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சுயாட்சி நடத்திக் கொண்டனர். அவர்களது மொழி, கல்வி-பண்பாடு, தனித்துவம், மத உரிமைகள் நசுக்கப்படவில்லை. ஆனால் குருச்சேவ் பிரஷ்னேவ் ஆட்சிக்காலத்தில் அதிகார வர்க்க முதலாளித்துவப் பாசிசத்தின் கீழ் அவர்களது உரிமைகள் பறிக்கப்பட்ட போதும், சோவியத் ஒன்றிய அமைப்புதான் மேலானது என்று ஏற்றிருந்தனர். ஆனால் ஏகாதிபத்திய ஊடுருவலும், அதிகரித்து வந்த அரசியல் பொருளாதார நெருக்கடிகளும் தனி

1992 டிசம்பரில் பழைய குருச்சேவ் - பிரஷ்னேவ் கும்பலலைச் சேர்ந்த அதிகார வர்க்க முதலாளியக் கம்யூனிஸ்டு கட்சித் தலைமை, புதிய ஏகபோக முதலாளிய கோர்பி - யேல்ட்சின் கும்பலுக்கு எதிராக அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கையில் இறங்கியது. பாசிச சதிகாரன் யேல்ட்சின் அதிகாரத்தைப் பிடிப்பதற்கு வசதியாக பல தேசிய இனவெறித் தலைமைகளின் கூட்டுச் சேர்ந்து கொண்டும், சோவியத் ஒன்றியத்தைப் பல கூறுகளாகப் பிளந்து பலவீனப்படுத்தும் மேலை. ஏகாதிபத்திய நிர்ப்பந்தத்தை ஏற்று தேசிய இனக் குடியரசுகள் பிரிந்து போவதை அனுமதித்தான். ஆனால் அவற்றைத் தொடர்ந்து தனது இராணுவ மேலாதிக்கத்தில் வைக்கும் நோக்கத்தோடு "சுதந்திரக் குடியரசுகளின் பொது நல அமைப்பு" (CIS) ஒன்றை நிறுவிட



குரோசிய கிராமம் ஒன்றில் செர்பியர்களால் தரைமட்டமாக்கப்பட்ட கட்டிடங்கள்

நாடு, தனி அரசுதான் தீர்வாகும் என்ற முடிவுக்குப் பல தேசிய இன மக்களையும் தள்ளின.

பிரஸ்ட்ரொய்காவையும் கிளாஸ்நாஸ்ட்டையும் கொண்டு வந்த கோர்பச்சேவ், தேசிய இன ஒடுக்கு முறைக்குக் காரணம் ஸ்டாலினின் சதியும் சர்வாதிகாரமும்தான் என்று பழி போட்ட கோர்பச்சேவ், லாட்வியா, எஸ்டோனியா, லித்துவேனியா ஆகிய பால்டிக் தேசிய இனக் குடியரசுகள் பிரிந்து போகும் நடவடிக்கைகளில் இறங்கியபோது தனது பாசிச, ருசியப் பேரினவாதக் கோர முகத்தைக் காட்டினான். பிரிவினைப் போராளிகள் மீது இராணுவக் கவச வண்டிகளை ஏவினான். தெருக்களில் இரத்தம் சிந்தும் உள்நாட்டுப் போர் துவங்கியபோது மேலை ஏகாதிபத்தியங்கள் நிர்பந்தங்கள், மிரட்டல் காரணமாக அக்குடியரசுகள் பிரிந்து போக அனுமதிக்கப்பட்டன.

அவசர அவசரமாக ஒப்பந்தம் போட்டான். அணு ஆயுதங்கள், போர்க் கப்பல்கள் உட்பட இராணுவப் பேராயுதங்களைப் பகிர்ந்து கொள்வதிலும் இராணுவப் படைப்பிரிவுகளைப் பிரித்து ஒதுக்குவதிலும் இன்னமும் தீர்வு காண முடியாமல் முறுகல் நிலை நீடிக்கிறது. யேல்ட்சின் கும்பல் ருசியாவில் தனது அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொண்டவுடன் பிரிந்து சென்ற தேசிய இனங்களின் மீது தேவையானால் இராணுவத்தை ஏவி ஆதிக்கத்தை நிலை நாட்டவே எத்தனிக்கும். யேல்ட்சினுக்கு எதிராக அதிகாரப் போட்டியில் ஈடுபட்டுள்ள ருசிய தேசிய இனவெறியன் ஜெரினோவ்ஸ்கி கும்பல் வெற்றி பெற்றாலோ இது மேலும் தீவிரமாகும்.

தேசிய இனக் குடியரசுகள் பிரிந்து செல்வதற்கு முன்பாகவே, அவற்றுக்கிடையில் பிரதேசங்களைக் கைப்பற்றும்


படிப்பகம்

www.padippakam.com

போர்கள் மூர்க்கமாகத் துவங்கி விட்டன. ஜியார்ஜியாவுக்கும் அர்மேனியாவுக்கும், அர்மேனியாவுக்கும் அஜர்பைஜானுக்கும் இடையே நடந்த கொடூரமான போர்கள் ஒரு குறுகிய காலத்திலேயே பல ஆயிரம் பேரைப் பலி கொண்டு விட்டன. குறிப்பாக, நகர்னோ - கராபாக் பிரதேசத்தின் மீது அர்மேனியாவும் அஜர்பைஜானும் உரிமை பாராட்டி நடந்த கொடிய போரில் ஒரு சில நாட்களில் 15,000 பேர் கொல்லப்பட்டனர்.

முன்னாள் சோவியத் ஒன்றியத்துக்கு அடுத்து, தொடரும் துயரமாக, இட்லரின் நாஜிப் படையை விஞ்சி விட்ட போர்க் கிரிமினல் குற்றங்கள் நிறைந்ததாக இருப்பது முன்னாள் யுகோஸ்லாவிய நாட்டில் நடக்கும் தேசிய இனப் போர்கள். யுகோஸ்லாவியர் அனைவரும் ஸ்லாவியப் பூர்வகுடிகள் தாம்; துருக்கிய மற்றும் ஆஸ்ட்ரோ - ஹங்கேரியப் பேரரசுகளுக்கெதிராகவும் நீண்ட போராட்ட வரலாறு படைத்தவர்கள் தாம்; இறுதியாக இத்தாலிய முசோலினியின் பாசிசப் படைகளுக்கு எதிராக கம்யூனிஸ்டுகளின் தலைமையில் கொரில்லாப் போரில் வென்று ஒரே நாடாக அமைந்தவர்கள் தாம். இருப்பினும் ஆக்கிரமிப்புப் படைகளின் சதி, பிளவுகள் காரணமாக பல்வேறு இன, மதப் பிரிவுகளாகி விட்டனர். ஸ்லோவேனியா, குரோஷியா, செர்பியா, மாசிடோனியா, மாண்டி நிக்ரோ, போஸ்னியா - ஹெர்சகோவினா ஆகிய ஆறு குடியரசுகளையும், வோஜோவேனியா, கேஸோபா ஆகிய இரண்டு சுயாட்சிப் பிரதேசங்களையும் கொண்டிருந்தது முன்னாள் யுகோஸ்லாவியா. 1991 ஜூனுக்குப் பிறகு இந்தக் குடியரசுகள் பிரிந்து போவதாக அறிவித்து யுகோஸ்லாவியா நாடு கலைக்கப்பட்டது.

பிரிந்து போன குடியரசுகளில் ஸ்லோவேனியா, மாசிடோனியா, மாண்டிநிக்ரோ ஆகியவை மட்டுமே அவ்வளவாக மாற்று இனத்தவர் இல்லாத பிரதேசங்களைக் கொண்டவை. யுகோஸ்லாவியாவின் மக்கள் தொகையில் தனியொரு இனமாக அதிகமானவர்கள் செர்பியர்கள் தாம். ஆனால் இவர்கள் செர்பியக் குடியரசு தவிர போஸ்னியா - ஹெர்சகோவினாவில் பெரும்பான்மையினராகவும், குரோஷியாவில் கணிசமான பகுதிகளில் பெரும்பான்மையினராகவும் உள்ளனர். செர்பியாவுடன் இணைத்துக் கொள்வதற்காக செர்பியக் குடியரசு போரிட்டு வருகிறது. குரோஷியாவில் உள்ள செர்பியர்கள் வாழும் பகுதியைத் தக்க வைத்துக் கொள்ளவும், போஸ்னியாவில் தமது மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளைக் கைப்பற்றவும் குரோஷியா போரிட்டு வருகிறது. ஆனால் போஸ்னியா - ஹெர்சகோவினாவின் நிலையோ துயரங்கள் நிறைந்தது. ஒருபுறம் செர்பியர்கள், குரோஷியர்கள் என்று இனரீதியிலும், மறுபுறம் கிறித்தவர்கள், இசுலாமியர்கள் என்று மதரீதியிலும் பிளவுபட்டுள்ள போஸ்னியர்கள், தேச இனக் கலப்போடு திட்டுத் திட்டாகவும், தொடர்ச்சியான நிலப்பகுதியாக இல்லாமலும் வாழும் பிரதேசங்களை கொண்ட போஸ்னியா ஒரு தனி தேசிய இனமாக உருப்பெற்று வந்தது. போஸ்னியர்கள் பிளவுபடாத தனிக் குடியரசாகவே வாழவிரும்பினாலும், குரோஷியர்களும், செர்பியர்களும் அவர்களைப் பிளவுபடுத்தியும் படை அனுப்பியும் கொடிய உள்நாட்டுப் போரைக் கடந்த மூன்றாண்டுகளாக நடத்தி வருகின்றனர். இப்போது குரோஷியாவும் போஸ்னியாவும் கூட்டுச் சேர்ந்து செர்பியர்களுக்கு எதிராகப் போரிடுகின்றனர். ஐ.நா.வின் பெயரால் மேற்கு ஏகாதிபத்தியங்கள் நுழைந்து போஸ்னியாவைப் பத்து மாவட்டங்களாகப் பிரித்துக் கூறு போட்டுக் கொள்ள முயலுகின்றன. அங்கு நடக்கும் உள்நாட்டுப் போரில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு என இனவெறி தாண்டவமாடுகிறது.

இதுதவிர செர்பியக் குடியரசில் உள்ள கேஸோபோவில், அல்பேனியர்கள் பெரும்பான்மையாகவும் வோஜோனியாவில் ஹங்கேரிய - ருமேனியர்கள் கணிசமான அளவிலும் வாழுகின்றனர். இதேபோல முன்னாள் சோசலிச நாடுகளான கிழக்கு ஜெர்மனி, போலந்து, ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரி மற்றும் ஹங்கேரி ஆகிய நாடுகளில் எல்லாம் பிற தேசிய இனமக்கள் சிறுபான்மையினராக வாழும் பிரதேசங்கள் நிறைந்திருக்கின்றன. அவர்களது உரிமைகள் நசுக்கப்பட்டு நீறுபூத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருக்கிறார்கள்.

• ஆர்.கே.

## வனத்துறையை எதிர்த்து விவசாயிகள் போராட்டம்

தென்னாற்காடு மாவட்டம் - விருத்தாசலம் வட்டத்தைச் சேர்ந்த ஆலிச்சிக்குடி, க. இளமங்கலம் கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள், தங்களது நிலங்களுக்குச் செல்வதற்கும் உற்பத்தியான விளை பொருட்களைச் சந்தைக்குக் கொண்டு செல்வதற்கும் விருத்தாசலம் - கருவேப்பிலங்குறிச்சிக்கு இடையிலுள்ள காட்டுப் பாதையைத்தான் பரம்பரை பரம்பரையாகப் பயன்படுத்தி வருகின்றனர். அக்காட்டுப் பகுதியில் வன அலுவலராகப் பணியாற்றி வரும் இராசேந்திரன், இக்காட்டுப் பாதை வழியாக "டிராக்டர்" மூலம் கரும்பு ஏற்றி வருபவர்களிடம் ரூ. 100/-ம், மாட்டு வண்டியில் கரும்பு ஏற்றி வரும் விவசாயிகளிடம் ரூ. 50/-ம் என இலஞ்சம் பெற்று வருகிறார்; தர மறுப்பவர்களை வழக்குப் போட்டு சிறையினுள் தள்ளிவிடுவதாகவும் மிரட்டி வந்துள்ளான். இதனிடையே இக்காட்டுப் பாதையைப் பயன்படுத்துவதே சட்ட விரோதமானது என அறிவித்து விவசாயிகளின் பாரம்பரிய உரிமையைத் தட்டிப் பறிக்க முயலுகிறது வனத்துறை.

இந்த அநீதியை எதிர்த்து அறைகூவல் விடுத்தது விருத்தாசலம் பகுதி "புதிய ஜனநாயகம் வாசகர் வட்டம்". எதிர்த்துப் போராட அப்பகுதி விவசாயிகளை அமைப்பாக அணி திரட்டினர் வாசகர் வட்டத் தோழர்கள். 15.08.95 அன்று அக்காட்டுப் பாதையில் கருப்புக் கொடி ஏற்றும் போராட்டம் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. இப்பிரச்னை தொடர்பாக அனுப்பப்பட்ட மனுக்களைக் குப்பைத் தொட்டிக்கு அனுப்பிய அரசு இயந்திரம், போராட்டம் என்றவுடன் பதறிப் போய், விவசாயிகளைப் பேச்சு வார்த்தைக்கு அழைத்தது.

12.08.95 அன்று நடந்த பேச்சு வார்த்தையில், "அக்காட்டுப் பாதையை நிலமாற்று நடவடிக்கையின் மூலம் பெறுவதெனவும், அதுவரை அப்பாதையில் விவசாயிகள் செல்வதை வனத்துறையினர் தடுக்கக் கூடாது" எனவும் தீர்மானிக்கப்பட்டது. இப்பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளாத வனத்துறை, வட்டாட்சியாளருக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தது. அக்கடிதத்தில் அக்காட்டுப்பாதை வனத்துறைக்குத்தான் சொந்தமெனக் கூறியிருந்ததோடு, வாசகர் வட்ட முன்னணித் தோழர் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதைக் கேட்டு ஆத்திரமாகிப் போன விவசாயிகள், வன அலுவலர் தங்களிடம் இலஞ்சம் வாங்கியது உண்மையெனவும் தோழர் மீது போடப்பட்டுள்ள வழக்கை ஊர் மக்களே சந்திக்கப் போவதாகவும் கூறினார்கள்.

பேச்சு வார்த்தையில் ஏற்பட்டுள்ள உடன்படிக்கையின் காரணமாக கருப்புக் கொடி ஏற்றும் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இப்போராட்டம் விவசாயிகள் மத்தியில் நிலவி வந்த அதிகார வர்க்கம் பற்றிய மதிப்பீடுகளைத் தகர்த்திருப்பதோடு, போராட்டத்தின் மூலம் மட்டுமே உரிமையினைப் பாதுகாக்க முடியும் என்ற உணர்வினைப் பலப்படுத்தியுள்ளது.

புதிய ஜனநாயகம் வாசகர் வட்டம்,
விருத்தாசலம்.



படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்க

## கிரிமினலுக்குச் சட்டபூர்வ பாதுகாப்பு

உத்திர பிரதேச மாநிலத்தில் காஸியாபூர் தொகுதியினைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் முக்தார் அன்சாரி. இவருக்குத் தற்பொழுது "Z" பிரிவு அரசு பாதுகாப்பு கொடுக்கப்பட்டுள்ளது. எந்தத் தீவிரவாதிகளிடமிருந்து பாதுகாக்க எனக் கேட்கத் தோன்றலாம். ஆனால் உண்மையோ, இவன் முப்பதிற்கும் மேலான கொலை வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளான். இரண்டு மாத காலம் பரோலில் வெளி வந்துள்ள இக்கிரிமினல் எம்.எல்.ஏ.வை, எதிர்க் கும்பல் கொன்று விடக் கூடாது என்பதற்காகவே, இந்த உயர்ந்த பாதுகாப்பை வழங்கியுள்ளார் மாயாவதி.

## தொடரும் தேவதாசி முறை

ஒரிஸ்ஸாவிலுள்ள பூரி ஜெகந்நாதர் ஆலய நிர்வாகம், பார்ப்பனீய விபச்சாரப் பண்பாடான தேவதாசி முறையை அக்கோவிலில் தொடர்ந்து கடைபிடிக்க முயன்று வருகிறது. அக்கோவிலில் 5 தேவதாசிகளை நியமிப்பதற்காக, செப்டம்பர் 11-ந் தேதியன்று நேர்காணலை நடத்தியுள்ளது நிர்வாகம். இதே போன்று கடந்த 1977-ம் ஆண்டு நேர்காணலொன்றை நடத்தி ஐந்து தேவதாசிகளை நியமித்திருக்கிறது அந்நிர்வாகம். அக்கோவிலின் ஒரு பிரிவு பார்ப்பன பூசாரி கும்பல், "நமது கலாச்சாரம் எனும் அடிப்படையில் தேவதாசி முறை கடைப்பிடிக்கப்பட வேண்டும்" எனப் பெண்கள் மீதான இப் பண்பாட்டு தாக்குதலுக்கு முட்டுக் கொடுக்கத் தொடங்கியுள்ளது.

## பங்கு சந்தை முற்றுகை

கடந்த ஜூன் மாதம் 5-ந் தேதி 3000-க்கும் அதிகமான மெக்சிகோ நாட்டு விவசாயிகள், அந்நாட்டு தலைநகரில் அமைந்துள்ள பங்கு பரிமாற்ற நிலையத்தை முற்றுகையிட்டனர்; அவ்விற்பனை நிலையத்தின் கதவுகளை மூடி, பலமணி நேரத்திற்கு பங்கு சந்தை இயங்க முடியாது செய்தனர். தாங்க முடியாத வறுமை மற்றும் ஏகாதிபத்திய ஒடுக்கு முறைக்கு எதிராகவே இப்போராட்டத்தை நடத்தியதாக அவர்கள் கூறினர். இப் போராட்டத்தில் கலந்து கொள்வதற்காக அந்நாட்டின் தென்பகுதியைச் சேர்ந்த பல விவசாயிகள் 40 நாட்கள் பிரயாணம் செய்து 600 மைல் தூரத்தைக் கடந்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.




பெங்களூரில் "கென்டக்கி" கடைக்குப் போடப்பட்டுள்ள போலீசு பாதுகாப்பு

## அடியாட்படையும் இறக்குமதி

தாராளமயமாக்கலின் மூலம் அந்நிய நாட்டு மூலதனத்தை மட்டுமல்ல, அந்நிய நாட்டு போலீசையும் நாட்டினுள் அனுமதிக்கும் திட்டமொன்றைத் தீட்டியுள்ளது மைய அரசு. இதன்படி நமது நாட்டு பாதுகாப்பு அதிகாரிகள் அந்நிய நாட்டு அதிகாரிகளால் நேரடியாகவே இங்கும் அல்லது வெளிநாடுகளுக்குச் சென்றும் பயிற்சி பெறுவார்கள். உள்ளூர் போலீசார் கூட இப்பயிற்சி பெறுவதற்கு ஏற்றவாறு திட்டமிடப்பட்டுள்ளது. "அந்நிய மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்களின் உயிருக்கும் முதலீட்டிற்கும் பாதுகாப்பு அளிக்கவே இப்பயிற்சி" என மைய அரசு விளக்கமளித்துள்ளது.

## அமெரிக்காவின் நஞ்சு உணவு

அமெரிக்க பன்னாட்டு நிறுவனமான பெப்சியின் துணை நிறுவனம் "கென்டக்கி", பெங்களூர் நகரில் துரித உணவகம் ஒன்றை நடத்தி வருகிறது. இங்கு விற்கப்படும் கோழிக் கறி "மனிதர்களுக்கு ஊறுவிளைவிக்கக் கூடியது" என அம்பலப்படுத்தியது நஞ்சுண்டசுவாமி தலைமையிலான கர்நாடக விவசாயிகள் சங்கம். மேலும் இந்நிறுவனத்தைத் துரத்தியடிப்பதற்கும் அறை கூவல் விடுத்திருந்தது. தற்பொழுது பெங்களூர் மாநகராட்சி இந்நிறுவனம் விற்கும் கோழிக் கறியில் மனிதர்களுக்கு ஊறு விளைவிக்கும் எம்.எஸ்.ஜி. எனப்படும் இரசாயனப் பொருள் அளவுக்கு அதிகமாக இருப்பதனைக் கண்டறிந்துள்ளது. அதன் உரிமத்தை ரத்து செய்வதற்கான விளக்கம் கோரும் நோட்டீஸ் ஒன்றையும் அனுப்பியிருக்கிறது.

## உ.பி.யில் யார் ஆட்சி?

உ.பி. மாநிலத்தின் பிரதாப்கர் மாவட்டத்தைச் சேர்ந்தவர் சமர் பகாதூர் என்ற இளைஞர்; பாஸி எனும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த இவ்விளைஞர், தாகூர் சாதியைச் சேர்ந்த ஓம் பிரகாஷ் சிங் என்பவரின் வயலில் வேலை செய்ய மறுத்துள்ளார்; இதனால் இவரது இரு கரங்களையும் துண்டித்துள்ளனர் மேல்சாதி வெறியர்கள். சமர் எனும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 15 வயது பெண் தாகூர் குண்டர்களின் பாலியல் பலாத்காரத்துக்குப் பலியாகியுள்ளார். பிரதாப்கர், சுல்தான்பூர், ரேபேரேலி மாவட்டங்களில் கிராமத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பலர், தாகூர் - பார்ப்பன நிலப்பிரபுக்களால் அழித்தொழிக்கப் பட்டுள்ளனர்.

Published and Owned by A. SHANMUGARAJU, 25 Arunachalam St., Jothiramalnga Nagar, Madras - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 65 Arcot Rd., Madras - 600 024. Editor: A. SHANMUGA RAJ

www.padippakam.com

# இதுதான் இன்றையா இந்தியா

தகர்ந்து போன ஓட்டுக் கூரைகள்; நொறுங்கிப் போன பண்ட பாத்திரங்கள். சிதம்பரனார் மாவட்டம் கொடியன்குளம் தாழ்த்தப்பட்ட மக்களின் மீது மேல்சாதி வெறி கொண்டு அதிகார வர்க்கத்தின் ஆணையின் கீழ் போலீசு நாய்கள் கட்ட விழ்த்து விட்ட ''வெள்ளி நடவடிக்கை'' என்ற வன்முறைத் தாக்குதலின் மௌன சாட்சிகள் இவை. உதவி ஆட்சித் தலைவ ரும் மாவட்ட போலீசு அதிகாரியும் தளப திகளாக உத்தரவிட, போலீசாரால் அக்கி ராமம் பட்டப்பகலில் சுற்றி வளைக்கப் பட்டது. கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும் துப்பாக்கியால் சுட்டும் அத் தாழ்த்தப்பட்ட மக்கள், வயது வேறுபா டின்றி அடித்து ஓட ஓட விரட்டப்பட்ட னர்; உடமைகள் அடித்து நொறுக்கப்பட் டன; பணமும் நகையும் களவாடப்பட் டது; மேல்சாதி வெறியும் அதிகார போதையும் தலைக்கேற அரிசியிலும் பருப்பிலும் கிணற்று நீரிலும் மண்ணெண் ணெயையும் பாலிடாலையும் ஊற்றி விஷமாக்கியது போலீசு. அருகிலுள்ள காசிலிங்கபுரம், ஆலந்தூர் கிராம தாழ்த் தப்பட்டோர் குடியிருப்புகளும் போலீ சின் சூறையாடலுக்கு இரையாகிப் போயின.

இதோ தாழ்த்தப்பட்ட மக்களின் மீது பாய்ந்து குதறிய தமிழக போலீசு, ஜெயாவின் வளர்ப்பு மகனின் திருமண ஊர்வலத்தில் குதிரை அணிவகுப்பு, கர காட்டம் எனக் களி வேடிக்கை காட்டி வந்தது. அதிகாரமுறைகேடுகளும், ஆடம்பரமும், வக்கிரமும் பொங்கி வழிந்த இத்திருமணத்திற்காகப் பந்தல் கால் நட்டதிலிருந்தே உயர் அதிகாரி தொடங்கி அடிமட்ட போலீசுகாரன் வரை கை கட்டி செய்த சேவைகளைப் பட்டியல் இட்டு மாளாது. திருமணப் பந் தலை யாரும் நெருங்கிவிட முடியாதபடி நாள் கணக்கில் நாய்போல் காவல் காத் தது; மாப்பிள்ளை ஊர்வலத்தை ஒளிப்ப திவு செய்த சன்.டி.வி. ஊழியரைத் தூக் கிக் கொண்டு போய் தாக்கியது; அந்நியச் செலாவணி மோசடியில் கைது செய்யப் பட வேண்டிய சசிகலாவின் அக்காள் மகன் தினகரனுக்குப் பந்தலிலேயே பாது காப்பு அரணாக நின்றது; பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலுக்குத் தனது எஜ மான விசுவாசத்தைக் காட்டிக் கொள்ள எச்சில் இலைகளைப் பொறுக்கிப் போட வும் தயங்கவில்லை தமிழக போலீசு.

ஆளும் வர்க்க விசுவாசம், அதிகார போதை, மேல்சாதி வெறி, கிரிமினல் பண்புகள் கொண்டதுதான் போலீசு துறை; நிலவும் சமூக ஒழுங்கையும் சுரண் டல்முறையையும் கட்டிக் காக்கும் காவல் நாய் தான் போலீசு. உழைக்கும் மக்களை ஒடுக்குவதில் முன்னணியில் இருக்கும் இச்சட்டபூர்வ வன்முறைக் கும்பலைத் தூக்கியெறியாது தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் விடுதலையைச் சாதிக்க முடியுமா?


படம் உதவி: நக்கீரன்



